பழம்பாடல் புதுக் கவிதை

நெல்லைக் கண்ணன்

பழம்பாடல் புதுக் கவிதை

நெல்லைக் கண்ணன்

வேலுக்கண்ணன் பதிப்பகம்
ப.எண் 69, பு.எண். 171, அம்மன் சந்நிதித் தெரு,
திருநெல்வேலி நகரம் - 627006
94431 36450

பழம்பாடல் புதுக் கவிதை

முதற் பதிப்பு	சனவரி 2011
	ஜூலை 2021
பதிப்பாளர்	வேலுக்கண்ணன் பதிப்பகம்
	ப.எண். 69, பு.எண். 171, அம்மன் சந்நிதித் தெரு,
	திருநெல்வேலி நகரம் - 627 006.
உரிமை	ஆசிரியருக்கே
நூல் விபரம்	மேப்லித்தோ
	அளவு 1 x 8
அச்சிட்டோர்	எழுத்துக் கலையகம்,
	திருநெல்வேலி
விலை	**125.00**

பழம்பாடல்
புதுக் கவிதை

உள்ளே....

தென்னாட்டு சிவனே

திருமந்திரம்

முத்தொள்ளாயிரம்

பரணி

அவிவேக சிந்தாமணி

கம்பன்

ஆண்டாள்

தென்னாட்டுச் சிவனே

யானை அதன் கால்களிலே என்னைப் போட்டு
அப்படியே கொன்று விடும் ஆண்டவரே
ஊனமுள்ள இவ்வுடலை சிங்கத்திற்கு
உணவாகக் கொடுத்து விடும் என் இறையே
வானுலகில் நரகத்தில் என்னைப் போட்டு
வதைப்பதற்கும் வழி செய்யும் பொறுத்துக் கொள்வேன்
தேனான தமிழறியார் முன்னே மட்டும்
தென்னாட்டுச் சிவனே எனை அனுப்பிடாதீர்

தனிப்பாடல்

கங்குல் யானைக் காலில் படுத்தினும் படுக்கலாம்
சுடர் விழிப் பகுவாய
சிங்க வாயிடைச் செலுத்தினும் செலுத்தலாம்
தென்புலத்தவர் கோமான்
வெங்கன் நரகிடை வீழ்த்தினும் வீழ்த்தலாம் விடையேறும்
எங்கள் நாயக தமிழறியார்கள் முன் இயம்புதல் தவிர்ப்பாயே

திருமந்திரம்

அம்பலத்தில் நல்லவர் போல் ஆடுகின்றார்
அறைகளுக்குள் லீலைகளில் கூடுகின்றார்
தம் பலத்தில் அத்தனையும் நடப்பதுவாய்
தம்பட்டம் அடிக்கின்றார் மேலும் மேலும்
வெம்பி இங்கு ஏழையர்கள் துன்பமுறும்
வேலைகளைச் செய்வதிலே வெட்கமுறார்
அம்புவியில் தங்களது செய்கை யெல்லாம்
ஆரறிவார் ரகசியம் என்றெண்ணுகின்றார்

நல்லவரோ இவற்றையெல்லாம் கண்டு கண்டு
நாள்தோறும் சிரிக்கின்றார் அவர் உணர்வார்
எல்லை யற்ற பரம் பொருளாம் இறைவன் அவன்
எங்கேதான் இல்லை என்றும் பார்த்திருப்பான்
கள்ளமற்றோர் உணர்ந்திருந்தார் தவறு இல்லை
களங்கமுள்ளோர் மறந்திருந்தார் தவறுகின்றார்
அள்ளி அருள் தருகின்ற இறைவன் அவன்
அனைத்தையுமே அறிந்திருப்பான் என்றுணர்க

திருமந்திரம்

கண்காணி இல்லை யென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி ஆகக் கலந்தெங்கும் நின்றானை
கண்காணி கண்டார் களவொழிந்தாரே

கண்களினால் வருகின்ற துன்பம் இது
கண்டதிது ஒரு நாள்தான் சோழனையே
பெண் எந்தன் பாடு பெரும் பாடாய்ப் போச்சு
பேச ஒன்றும் இல்லை எந்தன் வாழ்க்கையிலே
கண்ணிரண்டும் நன்றாக உறங்கி விட
கனவில்லை சோழனையே காண்பதற்கே
கண்ணான சோழன் அவன் எதிரில் வர
காண்பதில்லை நாணத்தால் கண்ணிரண்டும்

பெண்ணவளின் வருத்தமெல்லாம் கடலுக்குள்ளே
பெரும் அழகு மரக்கலங்கள் கொண்ட சோழன்
விண்ணுயரப் பெரும் புகழைக் கொண்டு ஓங்கும்
வீராதி வீரன் அவன் செங்கோலன்றோ
புண்பட்டுப் போகிறது பெண்ணின் உள்ளம்
புரியாத மன்னன் என்று பலரும் தூற்ற
கண் செய்த தவறுகளால் மன்னன் அன்றோ
கவலைகளுக் காளாவான்என்று நொந்தாள்

முத்தொள்ளாயிரம்

கனவினுள் காண்கொடா கண்ணும் கலந்த
நனவினுள் முன் விலக்கு நாணும் - இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று

கட்டித் தழுவி நின்றேன் கரங்களுக்குள் பூட்டி வைத்தேன்
எட்டாத சுகமதிலே இதழமுதமும் தந்து கொண்டான்
முட்டும் சுகமதனை முத்தமிழின் பொதிகை மலைக்
கட்டுக் கொண்டேயிலங்கும் கனி மார்பில் பெற்று(உ) வந்தேன்
எட்டி அவன் தேடி இரு புறமும் படுக்கையிலே
தட்டித் தடவி நின்றேன் தமிழ் மாறன் காணவில்லை
கட்டுக் குலையாத கன்னி மட்டும் தானிருந்தேன்
கனவில் வந்த பாண்டியனால் கனிந்து விட்ட கவிதை இது

முத்தொள்ளாயிரம்

களி யானைத் தென்னன் கனவில் வந்தென்னை
அளியான் அளிப்பானே போன்றான் – தெளியாதே
செங்காந்தள் மென் விரலால் சேக்கை தடவ வந்தேன்
என் காண்பேன் என் அலால் யான்

ஆண் யானை பெண் யானை நலங்கிள்ளியை
அண்டியவர்க்கு அவன் அளிக்கும் பரிசேயாகும்
தூண் போன்ற பேருருவம் மார் பகலம்
துடியிடையாள் எனக்கான தூங்குமிடம்
காண்பதிலும் களிப்பதிலும் வாழ்ந்திருந்தேன்
கட்டாயம் கலந்திடுவான் என்று எண்ணி
நாண் விட்டுப் பெண் நானும் காத்திருக்க
நலங்கிள்ளி செய்த செயல் நியாயமில்லை

எல்லோர்க்கும் எல்லாமும் தந்து போற்றும்
ஏற்றங்கள் கொண்டவன்தான் என்னிடத்தில்
வல்லானாய் மாறி எந்தன் சீலையினை
வன்முறையாய்ப் பறித்து விட்டான் விடுவேனோ நான்
பல் வேந்தர் நாடுகளைப் பணிய வைத்த
படைகளிடம் இவன் செங்கோல் ஒழுக்கம் தன்னை
சொல்வேன் நான் வரட்டும் எந்தன் நேர் எதிரே
சோழனுக்காய் வீதியினைப் பார்த்தே நின்றாள்

முத்தொள்ளாயிரம்

தானை கொண்டாடுவ தாயின்தன் செங்கோன்மை
சேனையறியக் கிளவேனோ - யானை
பிடி வீசும் வண் தடக்கை பெய் தண்தார்க்கிள்ளி
நெடு வீதி நேர்ப் பட்ட போது

வளை கொண்ட கையோடு மூங்கில் போல் தோளுமே
வடிவாகக் கொண்ட என் தோழி
பகை வெல்லும் வாட்களைக் கண்களாய்க் கொண்டும்
நற்பனிப் பார்வை கொண்டு நீ வாழி
இளையவள் என் கண்ணில் பாண்டியன் படுதலை
என் அன்னை தடுப்பதைப் பார் நீ
பகைவரைப் போலவே அன்னையும் என்னிடம்
பழி காணல் என்னடி நீதி
கதவினை அடைத்தெனை உள்ளேயே வைத்தலில்
கடுமைகள் காட்டலைப் பார் நீ
பதமான வார்த்தைகள் ஒன்றுமே இல்லை நான்
படுகின்ற பாட்டினைக் கேள் நீ
இதமின்றிக் கொல்கின்ற இவளது வாழ்க்கையில்
இளமையே இருந்தது இல்லையோ
பதமான காதலும் இவளது வாழ்க்கையைப்
படுத்தியதால் இந்தத் தொல்லையோ
ஒருவேளைப் பிறக்கையில் முதியவளாகவே
உதித்தனளோ எந்தன் அன்னையே
கருவுற்று எனைப் பெற்றாள் என்கையில் புரிகிறேன்
கன்னியாய் இருந்துளாள் உண்மையே
திருவுற்ற வேலதால் பகைவர்கள் தம்மையே
தெருவுறச் செய்த நம் பாண்டியன்
மருவுற்ற கோலத்தைப் பார்ப்பதில் இவட்கென்ன
மறந்தனள் இளமையில் வாழ்ந்ததை



முத்தொள்ளாயிரம்

வளையவாய் நீண்ட தோள் வாட்கணாய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ – தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல் வேல் மாறனைக்
கண் கொண்டு நோக்கல் என்பாள்



நீரால் நிறைந்திருக்கும் மாந்தை மாநகரத்தில்
நிழல் போலே இருக்கின்ற அன்பால் நிறைந்திட்ட
ஊரார் இவரன்றி நம் குறையைத் தீர்த்து விட
உறவென்று யார் உண்டு உணர்ந்தாயோ தோழி நீ
யாராலே இந்நோய் எமக்கு விளைந்ததுவோ
யார் குதிரை வேகத்திற் கிலக்கணமாய் ஓடுவதோ
சீராக அவரன்றி யார்தான் நம் குறை தீர்ப்பார்
சேரனன்றோ இந்நோய்க்கு மருந்தாவான் என் தோழி

ஊரார் தனை அழைத்து உண்மை நிலை சொல்லிடுவோம்
பேராளன் சேரனிடம் பேசி அவன் தோள் சேர
நீரேதான் பொறுப்பு என்றும் நீதி சொல்லி மன்னனையே
வாராதிருந்தால் எங்கள் வடிவழகுப் பெண் அழிவாள்
கார் போலக் கருணை கொண்டு காத்திடுக என வேண்ட
ஊராருக்கே முடியும் உயர்ந்தவரே காத்திடுவார்
வார் குழலாள் காதலினை வாழ வைக்கும் பொறுப்பதனை
ஊராருக்களிக்கின்ற உயர்ந்த கவி காண்பீரே

முத்தொள்ளாயிரம்

மல்லல் தீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டும் நம் குறை – நல்ல
திலகம் கிடந்த திரு நுதலாய் அஃதன்றோ

வடக்கிருந்து வருகின்ற வாடைக் காற்று
வாயாரப் புகழுதிங்கே பாண்டியனை
மடக்கி அவன் வடக்கையையும் தன்னுடைய
மாநிலத்தில் சேர்த்தனால் விளைந்த நன்மை
தொடக்க முதல் புகழுதது பாண்டியனை
தூய அவன் செங்கோலை ஆட்சியினை
அடக்கமுள்ள பெண்ணாளும் அரற்றுகின்றாள்
ஆம் அங்கு பாண்டியனால் அவதி கொண்டாள்

வடக்கிருந்து வருவதனால் புகழ்ந்து நின்றாய் என்
வளையல்களை நான் இழந்த தவனால்தானே
உனக்கென்ன தெரியும் தெற்கே பொதிகை மலை
உள்ளோர்கள் சமையலுக்கே சந்தனமாம்
மணக்கின்ற மரம் கொண்டே சமைத்திடுவார்
மாறன் அவன் பெருமை இது சரிதான் ஆனால்
எனக்கிங்கு விளைந்தற்கு என்ன நீதி
என்ன செய்வாய் தென்றலுக்கே தெரியும் அது

முத்தொள்ளாயிரம்

மாறடு போர் மன்னர் மதிக்குடையும் செங்கோலும்
கூறிடுவாய் நீயோ குளிர் வாடாய் - சோறடுவார்
ஆரத்தால் தீ மூட்டும் அம்பொதியில் கோமாற்கு என்
வாராத்தால் தோற்றேன் வளை

நீர் நிலையில் மலர்ந்துள்ள மலர்களையே
நெஞ்சினிலே மாலையாக்கிச் சூட்டியுள்ளான்
ஈரம் மட்டும் அவன் நெஞ்சில் இல்லை இங்கே
இளஞ்சோழன் காவல் ஒன்றும் சரியாயில்லை
யாரவனைப் பாராட்டி நின்ற போதும்
என் மனது ஏற்காது அவர்தம் காவல்
சீரதனைச் சொல்கின்றேன் கேட்பீர் நாட்டீர்
சிந்தித்தால் உணர்வீர்கள் உண்மை நன்றாய்
காவலன் தான் மறுத்தேனோ இல்லை இல்லை
கண்கள் வழி நுழைந்தானே தடுத்தேனோ நான்
ஆவலுடன் அவன் தன்னையன்றி வேறு
யார் நினைவும் இல்லாமல் வாழும் என்னை
காவல் செய்ய வேண்டுமென்றால் மாலை தோறும்
கையிலுள்ள குழல் கொண்டு ஊதி என்றன்
ஆவியினைப் பறிக்கின்ற ஆடு மேய்க்கும்
அச் சிறுவர் கொடுஞ் செயலைத் தடுக்க வேண்டும்
பாவி மகள் கேள்வியிலே நின்று ஆடும்
பதை பதைப்புக் கேள்வியினைப் புரிந்தீரோ நீர்
தாவி அவன் மார்பினிலே சாய வொண்ணா
தனி இரவு கொடும் இரவு வருவதனை
கோவலர் வாய்க் குழல் உணர்த்தும் என்பதாலே
கொடுமை அதைத் தடுப்பதற்கு வேண்டுகின்றாள்
பாவம் இந்தக் கோதையினைக் காப்பதற்கு
பனிமலரின் சோழன் அவன் வருவானோ தான்



முத்தொள்ளாயிரம்

தெண்ணீர் நறு மலர்த்தார் சென்னி இளவளவன்
மண்ணகம் காவலனே என்பரால் - மண்ணகம்
காவலனே ஆனக்கால் காவானோ மாலை வாய்க்
கோவலர் வாய் வைத்த குழல்

தேர்ச் சக்கரம் தன்னை நிமிர்த்த வல்ல
திமிர்ந்திருக்கும் தோள் கொண்ட பாண்டியனின்
போர்ச் சிறப்பை சொல்லுகின்றார் புலவர் அந்தப்
புகழுரையைக் கேட்டாலே பெருமை தோன்றும்
ஊர் முழுக்க தன் அழகுக் குடையின் கீழே
ஒன்றாக்கி ஆளுகின்ற பாண்டியனின்
போர்த் திறத்தை அறிந்துணர்ந்த காரணத்தால்
பொன்னணிகள் அணிந்துள்ள வானோர் இந்தப்

பூமியிலே கால் வைக்க அஞ்சினராம்
புகழுகின்றார் பாண்டியனைப் புலவர் நன்கு
ஆமிதனை நாம் அறிவோம் இமையவர் கால்
அந்தரத்தில் தான் இருக்கும் தரையைத் தொடா
தாமிதனை தெரிந்திட்ட புலவர் அதைத்
தன் தலைவன் பாண்டியனின் புகழாய்ச் சேர்த்தார்
நாமிதனைக் கண்ணுற்றோம் மகிழ்ச்சி கொண்டோம்
நந்தமிழர் அனைவருக்கும் தர விழைந்தோம்

முத்தொள்ளாயிரம்

நேமி நிமிர் தோள் நிலவு தார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவலன் ஆணையால்
ஏம மணிப் பூண் இமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்

சேரனது பெருங்கோட்டைக் கதவைச் சென்று
சேர்ந்துவிட்டேன் அவன் காணும் ஆசையாலே
ஆரமென மாணிக்க மாலை அதை
அணிந்திருப்பான் தனைக் காணும் வேட்கையாலே
போகிறது என் நெஞ்சு முன்னே சென்று
பொருமி மீண்டும் வருகிறது அலைகிறது
ஊரினிலே வறியவர்தம் நாணம் அவர்
உள்ளமதை வருத்தி நிற்கும் தன்மை போலே

வறுமையிலே வாடி நிற்பார் செல்வந்தர் தம்
வாசலுக்கு உதவி கேட்கப் போயிடுவார்
அறுபடும் தம் உள்ளத்து நாணம் தன்னால்
அங்கொன்றும் கேட்காமல் வெட்கி நிற்பார்
தறி படும் அப்பாட்டைத்தான் எந்தன் உள்ளம்
தன்பாடாய்க் கொண்டிங்கே தவிக்கிறது
அறிவீரோ வறியவரும் நானும் ஒன்றாய்
ஆன கதை இவ்வாறே பெண்ணாள் சொன்னாள்

முத்தொள்ளாயிரம்

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைந்தேன் - நாணிப்
பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார்ப் போல
வருஞ் செல்லும் பேரும் என் நெஞ்சு

பல யானை கொண்ட ஒரு படையைக் கொண்ட
பலம் எண்ணி சேரனையே பகைத்திடாதீர்
வளமான கோட்டையதின் உயரம் கொண்டு
வாலாட்டி நிற்காதீர் சேரனிடம்
களம் என்றும் சேரனது சொந்தம் உடன்
கப்பம் கட்டிக் காப்பாற்றிக் கொள்ளும் உம்மை
நிலம் அல்ல வானோர்கள் பாரும் அங்கே
நீள் வில்லைப் பூட்டி தம்மைக் காத்துக் கொண்டார்

உடன் உந்தம் மதிற் சுவரில் வில்லைப் பூட்டும்
ஒரு போதும் தீங்கின்றி நாடு வாழும்
திடம் ஒன்று சொல்கின்றேன் சரணடைந்தோர்
தெய்வம் அவன் நல் வாழ்வு வாழ்ந்திடலாம்
உளம் கொண்டார் வான வில்லைக் கவிஞர் அதில்
உதித்தன்றோ இவ்வழகுக் கவிதை ஆகா
பழம் பெருமைத் தமிழ் இன்றும் வாழுதற்கு
பாடி நின்ற புலவரையே போற்றிடுவோம்

முத்தொள்ளாயிரம்

பல் யானை மன்னர் படுதிறை தந்துய்மின்
மல்லல் நெடு மதில் வாங்கு வில் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வோர் விசும்பு

பிறந்த நாள் கொண்டாட்டம் சோழனுக்கு
பெறுகின்றார் பரிசில்கள் வரிசையாக
சிறந்தததாம் பசுவினது கூட்டத்தோடு
செம்பொன்னும் அந்தணர்கள் பரிசாய்ப் பெற்றார்
கறந்த பால் வெண்மையெனக் கவிதை தரும்
கனித் தமிழின் புலவோரோ யானை பெற்றார்
சிறந்த இந்தப் பரிசுகளின் இடையில் இந்தச்
சிலந்தி மட்டும் தன் கூட்டை இழந்ததென்ன

வீடுகளை வீதிகளைச் சுத்தம் செய்தார்
வேந்தனவன் பிறந்த நாள் என்பதாலே
நாடெல்லாம் சுத்தம் செய்தார் என்ற போது
நடப்பது தான் இது அதனைப் புலவர் கண்டார்
கூடிழந்து சிலந்தி மட்டும் பிறந்த நாளில்
கொண்டாட்டம் இல்லாமல் இருத்தல் கண்டார்
வாடி நின்ற சிலந்தி அதன் வாட்டம் கண்டு
வடித்திட்டார் ஒரு கவிதை அதனைக் காண்பீர்

முத்தொள்ளாயிரம்

அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர்
மந்தரம் போல் மாண்ட களிறூர்ந்தார் – எந்தை
இலங்கிலை வேல் கிள்ளி இரேவதி நாள் என்னோ
சிலம்பி தன் கூடிழந்தவாறு

உங்கட்கொரு பொருள் உடைமை ஆயிற்றென்றால்
உடன் அதனை பத்திரத்தில் பதிவு செய்வீர்
தென் களத்தான் பாண்டியனின் உடைமை என்று
திசை சூழ்ந்த உலகத்தை அவனின் யானை
வன்களத்தில் வீழ்ந்து படும் எதிரி மன்னர்
வாகான மார்பகத்தில் தந்தம் கொண்டு
எங்களது பாண்டியனின் உடைமை இந்த
எழில் உலகம் என்றெழுதித் தீர்க்கின்றது
சங்கதியை கேட்டீரோ பாண்டியனின்
சரித்திரத்தில் சரி பங்கு கொண்ட யானை
தந்தமதை எழுத்தாணியாகக் கொண்டு
தார் வேந்தர் மார்புகளை ஓலையாக்கி
இங்கிவர்கள் அனைவருமே பாண்டியனின்
இலை வேலுக்கு இலக்காகி வீழ்ந்ததனால்
பொங்கு கடல் உலகங்கள் சொந்தம் என்று
பொறுப்பாகப் பதிகிறதாம் பத்திரத்தை



முத்தொள்ளாயிரம்

மருப்பூசியாக மறங்கனல் வேல் மன்னர்
உருத்தகு மார்போலையாக – திருத்தக்க
வையகம் எல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலை வேல் மாறன் களிறு

கை வளைகள் கண்டாயா என்றன் தோழி அவன்
கடல் விளைந்த சங்கினம்தான் உணர்ந்தாயா நீ
மெய்யினிலே மெய்யான மார்பகத்தில் நான்
மெய்ம் மறக்க அணிந்த அந்த மாலையதும்
பொய்யில்லை அவன் கடலில் பிறந்த முத்து
பொதிகை மலைச் சந்தனமே மேனியெல்லாம்
அய்யன் அந்தப் பாண்டியனின் உறவே என்றன்
அழகுக்கு அழகு செய்யும் உறவாய்க் கொண்டேன்

கொய்த மலர் மாலையினை அணியக் கூடக்
கொடுப்பினையே இல்லாமல் இந்தத் தோள்கள்
அய்யன் அவன் தோள்களுக்காய் மீண்டும் மீண்டும்
அலை பாய்ந்து நிற்கிறதோ புரியவில்லை
பொய்யில்லை அவன் உடைமை எல்லாம் இங்கே
பொருந்தி என்தன் மேனியெல்லாம் அழகு செய்ய
அய்ய இந்த தோள்கள் மட்டும் எதற்கு இங்கே
அடி போட்டு நிற்கிறதோ புரியவில்லை

முத்தொள்ளாயிரம்

கையதவன் கடலுள் சங்கமால் பூண்டதுவும்
செய்ய சங்கீன்ற செழுமுத்தால் – மெய்யதுவும்
பண்பொரு வேல் மாறன் வார்பொதியில் சந்தனமால்
என் பெறா வாடும் என் தோள்

நாணம் வேண்டும் வெட்கம் வேண்டும் நடக்கையிலே
நன்னடையை மேன்னடையைப் பயிலல் வேண்டும்
காண வரும் அனைவருமே ஆகா என்று
கண்மணி யுன் நடையழகைப் புகழல் வேண்டும்
பேணி இந்த வழியனைத்தும் கொண்டால் தானே
பெண்ணென்று கொள்வார்கள் இல்லை யென்றால்
காணி கரைத்தூற்றினாற் போல் உன்னை யிங்கு
சாடை மாடை பேசுவார்கள் புரிகிறதா
பையப் பைய நடந்து வந்தால் தானே இங்கு
பார்ப்பவர்கள் உன்னழகைப் போற்றுவார்கள்
கையெடுத்து உயர்த்தி ஒரு வாழ்த்துச் சொல்லி
காலெடுத்து மெல்ல நீயும் நடந்தால் தானே
ஐயன் எங்கள் பாண்டியனின் அழகை யெல்லாம்
ஆராதனை செய்து மனதில் கொள்வோம்
மெய்யழகே மெல்ல நட பெண்மை போற்று
மேதினியில் யானைகளில் பெண் நீயேதான்
பெண் யானை பாண்டியனைச் சுமந்து வரப்
பேசுகின்றாள் பெண்ணவளும் அவனைக் காண
கண் மலர்ந்து கதவருகே காத்திருக்க
கட கடவென்றே அதுவும் நடந்து போனால்
என் செய்வாள் பெண்ணவளும் அதனாலே தான்
எப்படி ஒரு பெண் நடக்க வேண்டுமென்று
தன்னுணர்வை யெல்லாம் அந்த யானையிடம்
தளிர்க் கொடியாள் போதித்து நிற்றல் கண்டோம்

முத்தொள்ளாயிரம்



எலா அ மடப் பிடியே எங்கூடல்க் கோமான்
புலா அல் நெடு நல் வேல் மாறன் – உலாங்கால்
பைய நடக்கவும் தேற்றாயால் நின் பெண்மை
ஐயப் படுவது உடைத்து

பார்க்க வேண்டும் என்று நானா பார்த்து நின்றேன்
பாவி மகன் வீதி வழி வந்து விட்டான்
ஆர்க்கின்ற யானை என்ன வாங்கா என்ன
ஆட வைக்கும் மேளமென்ன தாளமென்ன
வார்த்தெடுத்த வடிவழகு மேனி என்ன
வாள் என்ன தோள் என்ன தாள் தான் என்ன
போர்த்தெடுத்து என் மனதைக் கொண்டு போன
பேராண்மைப் பேரழகு என்ன என்ன
போர்க்குணத்தான் அவனிடத்தில் செல்க தோழி
போய் என்ன சொல்வதென்று நானே சொல்வேன்
கார் குழலாள் என் தோழி என்று என்றன்
கனிப் பெயரைத் தனிப் பெயரைச் சொல்ல வேண்டாம்
பார்த்தென்னைப் பெற்றெடுத்து இன்று வரை
பக்குவமாய்க் காத்து நிற்கும் தாயின் பேரை
சீர் நிறைந்த நம் ஊரின் பெயரையெல்லாம்
செப்புகின்ற வேலையெல்லாம் வேண்டாம் தோழி
ஊரெல்லாம் உறங்குகையில் உறங்கவொண்ணா
உயிரொன்று படும் பாட்டைச் சொன்னால் போதும்
தார் மார்பைச் சேர்ந்திருக்கும் அந்த மாலை
தான் செய்த பேறில்லாள் கண்கள் மட்டும்
நீர் சோர அவன் நினைவில் நெஞ்சம் சோர
நிலைகுலைந்து நிற்பதனை மட்டும் சொல்லு
வார் குழலாள் அரற்றுகின்றாள் பாண்டியனின்
வரவிற்காய் தோழி என்ன செய்வாள் பாவம்

முத்தொள்ளாயிரம்

என்னை உரையல் என் பேருரையல் ஊருரையல்
அன்னையும் இன்னாள் என்ன உரையல் - பின்னையும்
தண்படா யானை தமிழ்நர் பெருமாற்கு என்
கண் படாவாறே உரை

சோழன் என்றால் நேர்மைக்கு ஒருவன் என்றும்
சொன்ன சொல்லைக் காப்பாற்றும் மேலோன் என்றும்
ஆழ நெடுங் கவிதை களில் புலவர் எல்லாம்
ஆர்ப்பாட்டமாய்ப் பாடி அளந்து விட்டார்
வேழ நெடும் படை கொண்ட வீரன் என்றார்
வீணர்களை ஒழிப்பதிலே சூரன் என்றார்
பேழையென தன் நாட்டைக் காத்து நின்று
பெருமையெல்லாம் போற்றி நின்ற வள்ளல் என்றார்
ஏழையென்னை யாரேனும் நினைத்தாரா பார்
எனக்குள்ள குறைகளினைக் கேட்டாரா பார்
பேழை தன்னை இடைநடுவில் கொண்ட பெண்ணே
பேசி நிற்பார் தன்னிடத்தில் சொல்வாயா நீ
வாழையடி வாழையென சோழ நாட்டில்
வரி என்றல் ஆறில் ஒரு பங்கு தானே
கோழையைப் போல் என்னுடைய நெஞ்சும் நாணும்
கொண்டிருந்த நலன் எல்லாம் பறித்துக் கொண்டான்
பீழையிதைச் செய்து என்னை அலைக்கழிக்கும்
பிரியமில்லாப் பெரியவனா சோழ மன்னன்
நாளை வரும் வரலாற்றில் இவனை யாரும்
நல்லவன் என்றே உரைத்தால் நீதியா மோ
வாளை மீனைப் போன்ற கண்ணாள் வடிவழகாள்
வாடி நின்று நீதி கேட்டாள் தோழியிடம்
காளையந்தச் சோழ மன்னன் நெறி தவறி
கன்னியிடம் பறித்ததெல்லாம் தருவானோதான்



முத்தொள்ளாயிரம்

என் நெஞ்சும் நாணும் நலனும் இவையெல்லாம்
மன்னன் புனல் நாடன் வௌவினான் மின்னே
அரவகல் அல்குலாய் ஆறில் ஒன்றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்

பழகி விட்ட பழக்கங்களை விடுவதற்கு
படுகின்றார் மனிதர்களே துன்பம் என்றால்
அழகு மிக்க ஆண் ஆனை சேரனது
ஆர்ப்பாட்டப் போரில் வெற்றி சேர்க்கும் ஆனை
பழகு தமிழ் அழகு அதன் நடையழகு
பார்த்தவர்கள் தொழுது நிற்கும் தனி அழகு
உழுது நிற்கும் பகைவர்களின் மார்பை எங்கும்
ஒரு நொடியில் பகை அழிக்கும் வீர ஆனை

முழு நிலவு நாள் தோறும் அழகு ஆனை
முரடாக மாறி நிற்கும் தன்மை கேட்பீர்
பழுதின்றி பகை நாட்டு மன்னர் தம்மின்
பளபளக்கும் வெண்குடையைப் பறித்தெறிந்து
தொழுதவரைப் பணிய வைத்த பழக்கத்திலே
தும்பிக்கை தனைக் கொண்டு நிலவும் ஏதோ
வழுவான பகை நாட்டார் குடைதானென்று
வலிந்ததனைப் பறித்திட தான் முயல்கிறதாம்

முத்தொள்ளாயிரம்

வீறு சால் மன்னர் விரிதாம் வெண்குடையை
பாற எறிந்த பரிசயத்தால் - தேறாது
செங்கண் மாக்கோதை சின வெங் களி ஆனை
திங்கள் மெல் நீட்டும் தன் கை

தெங்கிள நீர் மார்பகத்துப் பெண்ணாளவள்
சேர்ந்து விட்டாள் பாண்டியனைக் கண்ட அன்றே
மங்கையவள் மனத்திற்குள் பாண்டியனார
மகிழ்ச்சி மிகக் கொண்டிருந்தும் நேரில் காணாச்
சங்கடங்கள் சில நேரம் வருவதுண்டு
சதி செய்து அன்னை யவள் தடுக்கும் நேரம்
இங்கவளும் சொல்லுகின்றாள் அன்னை யவள்
ஏமாந்து நிற்கின்ற செய்தி தன்னை

கதவடைத்து வைப்பாளாம் அங்கும் இங்கும்
காவலுக்கு நிற்பாளாம் பெற்ற பெண்ணை
நிதம் அடைத்து வைப்பதையே நீட்டிப்பாளாம்
நெஞ்சு அவன் பின்னாலே சென்று விட்ட
விதம் அறியா மடமையிலே காடை தன்னை
வேடர்களும் கூடிட்டு மூடி வைக்க
இதமாகக் கீழிருக்கும் மண் பறித்து
எப்போதோ காடையது பறந்தாற் போல

முத்தொள்ளாயிரம்

கோத்தெங்கு சூழ் கூடல் கோமானைக் கூட என
வேட்டடங்குச் சென்ற என் நெஞ்சறியாள் - கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன் போல் அன்னை
வெறுங்கூடு காவல் கொண்டாள்

ஆண்டு நிற்கும் சோழனவன் அரச குலத்தானை
அவனியெல்லாம் வெல்லுதற்கு பழகி நின்ற ஆனை
தாண்டி அது போர்க் களத்தில் பாய்ந்து வரும் நேரம்
தலைகளோடு குடல்களுமே துண்டாகிப் போகும்
வேண்டி அதைப் பணிந்து நின்றால் பிழைத்தார்கள் இல்லை
விரைவாக உடலழிந்து உயிரிழப்பார் கண்டீர்
காண்பதற்கு அதைப் போன்ற களிறு ஒன்று இல்லை
கை தொழுது நிற்பார்கள் நாட்டிலுள்ள நல்லோர்
பவனியிலே அது அசையும் கம்பீரம் கண்டு
பார்ப்பவர்கள் அனைவருமே மெய் சிலிர்த்து நிற்பார்
அவதி அது தந்த தங்கு பாகர்களுக் கன்று
அரசனது பவனிக்கு வர மாட்டேனென்று
புதிது இது பாகருமே புரியாமல் நின்றார்
புலவருக்கோ புரிந்த திது புன்னகைத்துச் சென்றார்
அரிதான இச்செய்தி மனதினிலே கொண்டு
அரசருக்குச் சொல்வதற்கு அரண்மனைக்குள் சென்றார்
போரினிலே பகை மன்னர் கோட்டைகளின் கதவை
பொறுப்பாக தங்கத்தால் பேர்த்தெடுத்த போது
சீர் கெட்டுப் போன அந்தத் தந்தத்தினோடும்
சிரங்களையே கால்களினால் துவைத்தெடுத்த போது
பேர் பெற்ற பாதங்கள் நகமழிந்து போக
பெண் ஆனை முன்னாலே வருவதற்கு வெட்கி
ஊர் கோலம் வருவதற்கு மறுத்தங்கு ஆனை
உள்ளதென்ற உண்மையினை உவப்போடு சொன்னார்

முத்தொள்ளாயிரம்

கொடி மதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும் – பிடி முன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு

பாண்டியன் வருகின்றான் வீதி வழியாய்
பாய்ந்தோடும் குதிரையில்தான் மிக விரைவாய்
காண்பாள் தன் மகள் பின்னர் துன்பம் நேரும்
கணக்கிட்ட தாய வளும் கதவடைத்தாள்
வான் பார்த்த பயிர் போல பாண்டியனின்
வரவிற்காய்க் காத்திருந்தாள் பதறி நின்றாள்
தானவளை அடைத்து வைத்த காரணத்தால்
தாயவளோ மகிழ்ந்திருந்தாள் காவல் தன்னில்
பாண்டியனும் போன பின்னர் தாயும் வந்து
பக்குவமாய்க் கதவினையே திறந்து வைத்தாள்
தூண்டில் இட்ட மீன் போல் பெண்ணோ அங்கு
துடித்திருப்பாள் என்றவளோ அதிர்ந்து நின்றாள்
பாண்டியனைப் பார்த்தவளாய் மகிழ்ச்சியோடு
பாவையவள் பாடி நிற்க வியந்து நின்றாள்
சாவிக்காய் உண்டான பெருந் தொளையில்
சரித்திரத்துப் பாண்டியனைப் பார்த்து விட்டாள்
ஆவியினைக் காப்பதற்காய் தொளையைப் போட்ட
அப்பெரிய நல்லவர்க்கு என்ன செய்வேன்
சாவிக்காய் போட்ட தொளை இவளுக் கென்றே
சரியாகப் போட்டதாகக் கருதுகின்றாள்
தேவி அந்தப் பெரியவர்க்கு நன்றி சொல்லத்
தேடுகின்றாள் கைம்மாற்றுக் கடனைத் தீர்க்க

முத்தொள்ளாயிரம்

காப்படங்கென்றன்னை கடிமனை இல்ச்செறிந்து
யாப்படங்க ஓடி அடைத்த பின் - மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம் தொளை தொட்டார்க்கு
என்னை கொல் கைம்மாறு இனி

முத்து களுக் கரசன் பாண்டியனை
முலை தாங்காச் சிற்றிடையாள் பார்த்து விட்டாள்
கத்து கடல் வாழும் நல்ல சங்கினத்தால்
கை வளைகள் கொண்டிருந்தாள் வேர்த்து விட்டாள்
பத்து பதினைந்து நாள் கழிந்தும் அந்தப்
பாவி மகன் பவனியில்லை சோர்ந்து விட்டாள்
செத்தொழிந்து விடுவாள் போல் காட்சி தந்தாள்
செவ்விதழாள் துன்பமதைச் சேர்த்து நொந்தாள்
கைவளைகள் கழன்று விழும் உடனிருப்போர்
கண்டு விடத் தம் காதல் தெரிந்து விடும்
மை விழியாள் துடிக்கின்றாள் அந்த நேரம்
மன்னவனின் சங்கொலியோ பூம் பூம் என்னும்
அய்யமில்லை உறவுக்காய் உறவு வந்து
அன்போடு தன் உறவைக் காக்கும் என்ற
பொய்யில்லா அம்மொழியைப் புரிந்து கொண்டேன்
பொற் சங்கு கைச் சங்கைக் காத்தது பார்
சொல்லுகின்றாள் அப்பெண்ணாள் புரிந்தீரோ நீர
சோகமதில் கை வளைகள் கழலும் நேரம்
மெல்லிடையாள் வளைச் சங்கை பாண்டியனின்
மேலான சங்கு வந்து காத்ததென்று
வெல்லுகின்ற தொழில் ஒன்றே கொண்ட வேந்தன்
வீதி வலம் வருகின்றான் என்றுணர்த்த
நல்லொலியாய்ச் சங்கொலிக்க வளைகள் நிற்க
நலம் கொண்டாள் பாண்டியனைக் காண்போம் என்று

முத்தொள்ளாயிரம்

செய்யார் பிறர் எனினும் செய்வர் தமர் எனுஞ் சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய் - கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்து இயம்பக் கேட்டு

பதினெட்டு வயதேதான் பாண்டியர்க்கு
பையனென்று கேலி செய்தோர் நாடிழந்தார்
கதியற்றுப் போனார்கள் இளைஞனென்று
கணக்கிட்டோர் களி யானைத் தென்னன் முன்னே
விதி கெட்டுப் போனவர்கள் வாய்க் கொழுப்பால்
வீடிழந்தார் நாடிழந்தார் வீதி சேர்ந்தார்
மதிகெட்டுப் போனாரின் நாட்டையெல்லாம்
மன்னன் அவன் கொண்டதிலே நியாயம் உண்டு
கதி கெட்டேன் நான் அவனைக் கண்ட பின்னர்
கை தொழுது அவன் காதல் வரமே கேட்டேன்
பதி நான்தான் என்று சொல்லி என்னை வந்து
பக்குவமாய் ஏற்றிடுவான் என்றே நின்றேன்
விதி விதி பார் எந்தனது நிறமே கொண்டான்
வீரனவன் செய்கை இது நியாயம்தானா
எதிரிகளின் பார் பறித்தான் இகழ்ந்ததாலே
ஏந்திழை நான் பணிந்து நின்றும் நிறம் பறித்தான்
மாந்தளிரின் நிறம் பறித்தான் மனம் பறித்தான்
மங்கையெந்தன் நலமெல்லாம் பறித்துக் கொண்டான்
சாந்துணையும் அவன் துணைதான் என்று முன்னே
சரணடைந்து நின்றாளைக் கொன்றே போட்டான்
வேந்தனவன் செய்கையிதில் நியாயமுண்டோ
வேதனையைச் சேர்த்ததிலே பண்புமுண்டோ
ஆம் தமிழாள் கேட்கின்றாள் என்ன சொல்வீர்
அகம் அறிந்த தமிழர்களே உம்மைக் கேட்பேன்

முத்தொள்ளாயிரம்

எகளியானைத் தென்னன் இளங்கோ என்று எள்ளிப்
பணியாரைத் தம் பார் இக்க – அணி ஆகம்
கை தோழுதேனும் இழக்கோ நறு மாவின்
கொய் தளிர் அன்ன நிறம்

ஓராண்டாய் பாண்டியனின் பழக்கம் அவர்
உறவு கொள்ளல் அன்றாட வழக்கம்
சீரான அவ்வுறவில் பெண்ணாள் சொல்லும்
சி(ற்)ரிப்பான செய்தியினைப் பார்ப்போம்

படையெடுக்கும் பாண்டியனைப் பார்த்த அன்றே
பனிமொழியாள் தலை கவிழ்ந்தாள் அவனின் கைகள்
இடையிழுத்து அணைக்கையிலே தனை இழந்தாள்
இதழமுதம் உண்ணையிலே விழி துறந்தாள்
பட படவென்றித யமதும் துடிக்கும் வண்ணம்
பாவி மகன் உறவினிலே தனை இழந்தாள்
அட அட அவள் சொல்லுகின்ற செய்தி கேட்பீர்
அநியாயம் அநியாயம் தாங்க மாட்டீர்

பொறுக்காத கோபத்தால் ஊடல் கொண்டு
புறங் காட்டி நிற்பாளாம் ஊடல் தீர்த்து
இறுக்காத இறுக்கத்தால் நாணம் கொண்டே
இரு விழியும் தமையிழக்கச் சுகம் காண்பாளாம்

வெறுத்தாள் போல் நடித்தவளோ நடித்தல் விட்டு

விரும்பியவன் தருகின்ற சுகம் கொள்வாளாம்

நெருப்பாறாய் நின்ற உடல் நீராறாகி

நிம்மதியாய் உறங்கையிலே அவன் செல்வானாம்

கடுப்பாக ஒரு செய்தி சொல்லுகின்றாள்

கண்மணியாள் கேளுங்கள் வியந்து நிற்பீர்

அடுக்கடுக்காய் உறவு கொண்ட நாட்களிலும்

அவனை இவள் கண்ணாரப் பார்த்ததிலையாம்

ஊடலிலே திரும்பியதால் பார்க்கவிலையாம்

உடலிருக்க அப்போதும் பார்க்கவிலையாம்

கூடலிலே மயங்கியதால் பார்க்கவிலையாம்

கொள்ளை மொழிப் பாடல் இதோ கொள்வீர் நீரே

முத்தொள்ளாயிரம்

புலவி புறக் கொடுப்பன் புல்லிடின் நாண் நிற்பன்

கலவி களி மயங்கிக் காணேன் - நிலவிய சீர்

மண்ணாளும் செங்கோல் வள்வனை யான ஈதாராக்

கண்ணாரக் கண்டறியா ஆறு

நெற்றியிலே வியர்வை யது நீராக ஓடி விழ

நெய்தல் முத்து மாலையது முலைகளுடன் சேர்ந்து பட

கற்றையெனும் குழலதுவும் காடாகி நிலை குலைய

கையணியாம் வளையல்களோ கலகலவென் றோசையிட

முற்றும் என்று சொல்லுதற்கு முடியாராய் இருவருமே

முற் பிறவிச் சுக நினைவும் இப்பிறப்பில் காண்கின்றீர்

நிற்கின்றீர் நெஞ்சத்தில் நினைப்பதெல்லாம் கலையாக்கி

நெடு விழியீர் போதும் உந்தம் நெடுங் கதவம் தாள் திறவீர்

பரணி

கூடும் இளம் பிறையில் குறுவெயர் முத்துருள
கொங்கை வடம் புரளச் செங்கழு நீர் அளக
காடு குலைந்தலைய கைவலை பூசல் இடக்
கலவி விடத மடவீர் கரட திறமின் திறமின்

போகக் களம் விட்டுப் போர்க்களம் தான்
போகையிலே சொல்லி விட்டுச் சென்ற காளை
ஆகச் சில நாளில் வந்தே சேர்வான் என்று
ஆர்வமுடன் காத்திருந்தாள் ஆசைப் பெண்ணாள்
தாகம் மிகக் கொண்டாள் தழுவலுக்காய்
தடுமாறித் துடிக்கின்றாள் விழிகள் ஏங்க
நாகப் படம் போன்ற பெண்ணழகோ
நாட்ப் பலவாய் உறக்கத்தை கெடுத்ததங்கு

வருவது போல எண்ணத்தில் ஒடியங்கு
வாயிற் கதவில் இட்ட தாழ் திறந்தாள்
வரவில்லை என்றவுடன் மனம் தளர்ந்து
வாட்டமுடன் தாழினையே இட்டாள் மீண்டும்
ஒரு முறையா இரு முறையா பல முறைதான்
ஓடி ஓடித் திறந்தாளாம் மூடினாளாம்
திருகுகின்ற குமிழதுவும் தேய்ந்த சேதி
தென் தமிழான ஜெயங் கொண்டான் சொல்லுகின்றான்

பரணி

வருவார் கொழுநர் எனத் திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ

காதலர் தோள்கள் சேர்ந்து களி கொண்டு ஆடும் நேரம்
மாமதி வானில் தோன்றும் மங்கையோ கண்டதில்லை
ஆதலால் மதிக்குத் தன்னுள் அவமானம் பிடுங்கித் திங்க
சோதிக்கச் சமயம் தேர்ந்து சோதனை செய்தங்கு
பாதிக்கப்பட்டாள் பெண்ணாள் பனி மதிக் கதிர்கள் பட்டு
ஆதிக்க சக்தியாகி ஆட்டுது மதியும் அங்கே
வேதனைப் பட்டாள் அங்கே விரிஉயர் முலைகள் மீதே
பாதிப்பைச் செய்யும் அந்த பனி மதிக்கதிர்கள் கொண்டு

சோதனை நேரும் நேரம் சொந்தங்கள் ஒன்றே என்றும்
ஆதரவாகும் என்ற அம்மொழி உண்மை கண்டாள்
வேதனை தீர்க்க அங்கு விரி குழல் தன்னில் மங்கை
பேர் தரும் மலர்கள் சூட்டி பெருமைகள் செய்ததாலும்
சாதனைப் பூக்கள் தம்மைச் சார்ந்துள்ள வண்டின் கூட்டம்
தாம் ஒரு பந்தலைப் போல் தளிர்க்கொடி மேலேகூடி
வான் தரும் மதியின் துன்ப வாட்டத்தை போக்கு தென்றான்
தேன் தரும் கவிதை தந்த தென் ஜெயங்கொண்டான் தானும்

பரணி

களபம் வண்டல் இடும் கலச கொங்கைகளில்
மதி எழுந்து கனல் சொரியும் என்று
அளக பந்து மிசை அளிகள் பந்தா இடும்
அரிவைமீர் கடைகள் திறமினோ

வேல் விழியாள் தன்னிடத்தில் விடையும் பெற்று
விரைந்து சென்றான் போர்க்களத்தில் வேலே கண்டான்
பால் மொழியாள் தன் பார்வை வேலால் பட்ட
பாடங்கள் தனையெல்லாம் நினைந்து நின்றான்
சேல் அகட்டி அதன் வழியாய் தன்னை நெஞ்சில்
சேர்த்தெடுத்து அணைத்தாளின் எண்ணம் கொண்டான்
கோல் மன்னன் வெற்றி கொண்டான் விரைந்து அந்தக்
கோல மயில் தனைச் சேர ஓடி வந்தான்
வாசலிலே நின்றிருந்தாள் வடிவின் மிக்காள்
வா என்று கேட்காமல் இதழைச் சேர்த்தாள்
பூசலிலே இருப்பாளோ என்ற காளை
பூரித்து மனம் மகிழ்ந்து தன்னைத் தந்தான்
ஊசலென ஆடியவள் ஆடையெல்லாம்
உரித்தவனைப் பார்க்கின்றாள் கொஞ்சம் கூட
கூசாமல் தன்னாடை களைந்து நின்றாள்
கொங்கை கொண்டு அவன் மார்பில் ஒத்துகின்றாள்
வேல் கொண்ட புண்ணோடு வந்தான் மன்னன்
வேதனைகள் தீர்ப்பதற்காய் அன்பின் மிக்காள்
பால் கொள்ளப் போகுமிரு மார்பகத்தால்
பக்குவமாய் ஒத்துகின்றாள் புண்கள் தன்னில்
வாய் வழியே அமுதமதும் ஊட்டுகின்றாள்
வலி ஒழித்துச் சுகம் அவனும் காண்பதற்காய
பால் மொழியாள் மருத்துவத்தை பரணி தன்னில்
பாடுகின்றாள் ஜெயங்கொண்டப் பாவி மன்னன்



பரணி

தங்கு கண் வேல் செய்த புண்களைத்
தடமுலை வேது கொண்டு ஒற்றியும்
செங்கனி வாய் அமுது ஊட்டுவீர்
செம்பொன் நெடுங்கடை திறமினோ

இடம் மாறிப் போகாத காதலோடு
இதயத்தால் இணைந்திட்ட இருவர் இங்கு
தடம் மாறிப் போகாத தங்கள் காதல்
தன்மையினால் பெருமை கொண்டு வாழ்கின்றாராம்
நிறம் மாறிப் போகிறதாம் அவர்கள் வாழ்வில்
நெகிழ்வாகச் சொல்லுகின்றான் கடை திறப்பில்
புறம் பாடும் முன்னாலே ஜெயங்கொண்டானும்
போற்றி நிற்கும் அகம் காண்பீர் காண்பீர் நீவீர்

மாலையிலே துவங்கியதாம் தழுவல் அந்த
மங்கை நல்லாள் இதழ் இடையை இணைத்திட்டாளாம்
காலை வரும் என்கின்ற நினைவே இன்றி
களியாட்டம் தொடர்கிறதாம் மேலும் மேலும்
ஆலையிட்ட கரும்பாக இருவருமே
அடுத்தவரின் உடல் பிழிந்தே மகிழ்கின்றாராம்
காலை வந்து தொலைத்ததுவாம் என்ன செய்ய
கனி மொழியின் தோழியர்கள் வந்து விட்டார்

வேளையற்ற வேளையிலே வந்தார் என்றே
வேதனையில் தோழியரைக் காண வந்தாள்
பாளையிதழ்ச் சிவப்பினையே காணோம் என்று
பதை பதைத்துப் போனார்கள் தோழி மார்கள்

காளை யென்ன செய்து வைத்தான் என்ற போதே
கண்களிலே சிவப்பினையே கண்டு விட்டார்
பேழையென்னும் கண்ணிரண்டின் வெண்மை தன்னை
பேர்த்தங்கு இதழ்களிலே தந்திருந்தான்

இரவெங்கும் விழித்திருந்தால் கண்கள் எங்கும்
எப்போதும் சிவந்து விடும் இதுதான் உண்மை
பருவத்தின் இதழென்றும் பவளம் என்றே
பார்த்திருந்தோம் அது வெண்மையானதென்ன
கரு விழிக்குச் சிவப்பளித்து வெண்மை தன்னை
கனி இதழும் பெற்றதனைக் கண்டு நின்றார்
தருவதிலும் பெறுவதிலும் நிறங்கள் மாறித்
தடம் மாறும் அழகினிலே மயங்கி நின்றார்

பரணி

வாயிற் சிவப்பை விழி வாங்க
மலர்க் கண் வெளுப்பை வாய் வாங்கத்
தோயக் கலவி அமுதளிப்பீர்
துங்கக் கபாடம் திறமினோ

காத்திருந்து காத்திருந்து கண்ணிரண்டும் ஓய்ந்த மகள்
பார்த்திருந்த பாவி மகன் பக்கத்திலே வந்தமர்ந்தான்
சேர்த்தணைக்கும் ஆசை யுண்டு சிற்றிடையாள் கோபமதால்
பார்த்த படி காத்திருந்தான் பயமதனால் வேர்த்திருந்தான்
ஆர்த்தசையும் மார்பிரண்டும் அருகினிலே இருந்தும் அவைக்
கோர்த்தணைக்க முடியாமல் குழம்பி நின்றான் தங்க மகன்
வார்த்தைகளால் ஏதேனும் வம்பு வரக்கூடும் என்றே
வாய் திறக்க மாட்டாமல் வாடி அவள் முகம் பார்த்தான்
பார்த்தபடி அமர்ந்திருக்கும் பாவமதைப் பார்த்த பெண்ணாள்
சேர்த்தணைக்க முடியாமல் சிந்தனையில் சிரித்திருந்தாள்
வார்த்தையினைக் காக்காமல் தாமதமாய் வந்ததனால்
வடிவழகைக் காட்டாமல் படீரென்று எழுந்து சென்றாள்
கோர்த்தவளின் முந்தானைத் தலைப்பினையே பிடித்திழுத்தான்
வேர்த்தவளோ விடு விடென்று வேகத்தைக் காட்டுகின்றாள்
பார்த்தவனோ மேலும் மேலும் பற்றியே இழுக்கின்றான்
ஆர்த்தவளோ விடு விடென்று அதையேதான் சொல்லுகின்றாள்
போய்த் தொலையவில்லை அவள் போவதற்கும் மனதில்லை
காய்த்த மனம் இல்லாத கனி மனத்தாள் நின்றிருந்தாள்
வாய்த்த நல்ல வாய்ப்பதனில் சேலை தொட்டுப் பார்த்ததையும்
வடிவழகாள் விடச் சொல்லி வாயதனால் சொன்னதையும்
பேர்த்தெடுத்துப் பார்க்கின்றான் பிடி என்று சொல்வதைத்தான்
வார்த்தை மாற்றி விடு என்று வாயழகில் காட்டுகின்றாள்
ஆர்த்து நின்ற அன்பு மகன் அகராதி கண்டு கொண்டான்
வார்த்தை விடு என்று சொன்னால் வா என்னைப் பிடி என்று

பரணி

விடுமினெங்கள் துகில் விடுமினென்று முனி
வெகுளி மென்குதலைத் துகிலினைப்
பிடிமினென்ற பொருள் விளைய நின்றருள் செய்
பெடை நலீர் கடைகள் திறமினோ

புகைப்படத்தில் தகடுகளில் பிரிந்து போகும்
பொன்னான காதலனைப் பதிந்து கொண்டு
வகைப்படுத்திப் பார்க்கின்றீர் நாள் குறித்து
வந்த செய்தி நடந்த செய்தி சேர்த்து வைப்பீர்
திகைப்படைந்து போவீர் நீர் அந்தக் காலச்
செந்தமிழர் பெண்ணார் தம் திறனறிந்தால்
தொகைப் படுத்திச் சொல்லுகின்றான் ஜெயங்கொண்டானும்
தோகையவள் பெரும் பேற்றைச் செய்யுளாக

படையெடுத்துப் போகின்றோம் என்று சொல்ல
பாவையிடம் வந்து நின்றான் இனிய சொல்லான்
இடையெடுத்துத் தந்த இரு போர் முனையில்
இடுகின்றான் நகங்களினால் குறிகள் எங்கும்
தடையின்றி இரு மார்பைத் தந்து தந்து
தகவலினைப் பதிப்பதற்கு வழிகள் தந்தாள்
விடை கொடுத்தாள் அவன் சென்றான் மங்கை நல்லாள்
விரகமதைத் தீர்க்க அதை வழியாய்க் கொண்டாள்

வருவதற்கு பல நாட்கள் ஆகும் என்றே
வந்து சிலர் சேதி சொல்லி நிற்கும் போதும்
தருகின்ற அச்செய்தி மங்கை தானும்
தடுமாற வழி வகுக்கும் என நினைப்பார்

சிறு இடையாள் வருத்தமெதும் கொள்ள மாட்டாள்
சேமித்து வைத்த நகக்குறிகள் தன்னால்
மறுபுறத்தில் தனியாக ஆடையின்றி
மார்பகத்துக் குறிகளிலே மனம் கொள்வாளாம்

செல்வமில்லார் செல்வத்தைக் கண்டாற் போல
சிறந்த அந்தக் குறிகளிலே செல்வம் காண்பாள்
வல்லவனின் நகங்கள் இட்ட குறிகளெல்லாம் அவன்
வடிவழகைக் கண்டு கண்டு ஆடுவாளாம்
சொல்லுகின்றான் ஜெயங்கொண்டான் தேடிக் காண்பீர்
சுகம் சுகம்தான் பரணியிலே கடை திறப்பில்
உள்ளுகின்றேன் தமிழமுதை உள்ளி உள்ளி
உயிர் கொண்டு வாழ்கின்றேன் உவகையோடு

பரணி

முலை மீது கொழுநர் கை நக மேவு குறியை
முன் செல்வம் இல்லாத அவர் பெற்ற பொருள் போல்
கலை நீவி யாரேனும் இல்லா இடத்தே
கண்ணுற்று நெஞ்சம் களிப்பீர் கள் திறமின்

மலை தந்த மழையாலே விளைந்த முத்து
மாலையென உருக்கொண்டு மலைகள் சேர
சிலையுருவப் பெண்ணாளின் சிவந்த மார்பில்
சேர்ந்த முத்து மாலையினுக் கிடையே சென்று
அலை கடலின் பவளமதும் அவளின் மார்பில்
அணிகலனாய்ச் சேர்த்தானாம் எவ்வா றென்றால்
குவியும் இதழ் மார்பகத்தில் குவித்து வைத்து
கோலமிட்டான் பற்குறியால் மார்பகத்தில்

பதிந்து விட்ட பற்களது சிவந்த மார்பில்
பவள வடம் போட்டது போல் அழகு செய்ய
கனிந்து விட்டாள் பேரழகி காதலனின்
கவிதை வரி மார்பினிலே பவளமாக
புவியிலிது போற் கவிதை எங்கும் யாரும்
புகன்றதுண்டோ புகன்றீடுவீர் தமிழினத்தீர்
கவிதையிது ஜெயங் கொண்டப் பெரிய பாவி
கலிங்கத்துப் பரணியிலே புகன்றதையா

பரணி

முத்து வடம் சேர் முகிழ் முலை மேல்
முயங்கும் கொழுநர் மணிச் செவ்வாய்
வைத்த பவள வடம் புனைவீர்
மணிப் பொற் கபாடம் திறமினோ

மெல்ல நடந்தான் காளையவன்
மேனி சிலிர்த்தாள் மங்கையவள்
அள்ளி அணைத்தான் காளையவன்
அடங்க மறுத்தாள் பெண்ணவளும்
துள்ளி விழுந்தார் கட்டிலிலே
தொடர்ந்த தவர் தம் ஆட்டங்களே
பள்ளி அறையினில் இருவருமே
படித்தனர் பழம் புதுப் பாடங்களே

கள்ளியின் விழிகளில் காளையவன்
காளையின் விழிகளில் கள்ளி யவள்
அள்ளி அணைக்கையில் விழிகளெல்லாம்
அங்கே யிழந்தன பார்வைகளே
தள்ளி விடுதல் போல் நடிக்கின்றாள்
தழுவிடும் காளை துடிக்கின்றான்
கள்ளியின் உணர்வினைப் புரிந்த பின்னர்
கட்டித் தழுவிப் பாடம் சொன்னான்

கூடி மகிழ்ந்தனர் இருவருமே
குளித்தே மகிழ்ந்தனர் வேர்வையிலே
ஆடிக் களித்தவன் தூங்கி விட்டான்
அவளோ சேலையைத் தேடுகின்றாள்

நாடிக் களித்திட்ட நற் களியில்

நங்கை தன்னை இழந்ததனால்

ஊடி வருகின்ற நிலாவொளியை

உடையென்றெடுத்தே உடுத்துகின்றாள்

பாடு பொருளாய் இதை வைத்து

பாடி நின்றான் ஜெயங்கொண்டான்

கூடி அவனைத் தினந்தோறும்

கூட்டி வருவேன் உம்மிடத்தில்

ஆடிப் பாடிப் போற்றுங்கள்

அன்னை தமிழாள் தன்னழகை

ஓடி ஓடிக் கடை திறப்பால்

உண்மைக் காதல் போற்றுங்கள்



பரணி

கலவிக் களியின் மயக்கத்தால்
கலை போயகலக் கலை மதியின்
நிலவைத் துகிலென்றெடுத் துடுப்பீர்
நீள் பொற் கபாடம் திறமினோ

சிற்றிடையாள் நிற்கின்றாள் முலைகள் தாங்கி
சேர்ந்தங்கு சுகித்தவனோ ரசிக்கின்றானாம்
நெற்றி முதல் கால் வரைக்கும் அழகுப் பெண்ணாள்
நினைக்கவொண்ணா அணிகலன்கள் அணிந்திருந்தாளாம்
வெற்றி அங்கு அவளுக்கே தங்கம் எல்லாம்
வீண் என்று சொன்னானாம் சொன்னவனே
சற்று தலை சாய்ந்து நிற்கும் பெண்ணாள் மூக்கை
சட்டென்று பார்த்தானாம் அங்கே பெண்ணாள்

முத்தெடுத்து அணியாமல் குன்றி மணி
மூக்கினிலே அணிந்திருந்தாள் பார்த்த மகன்
பட்டெனவே கேட்டானாம் என்ன இது
பார்ப்பதற்கே ஒப்பவில்லை என்று சொல்ல
சட்டெனவே பெண்ணவளும் கண்ணை வாயை
சரியாக இரு கரத்தால் பொத்தினாளாம்
வெட்டனவே இளைய மகன் கத்தினானாம்
வெண் முத்து வெண் முத்து என்று சொல்லி

தலை சாய்ந்து நின்றதனால் புல்லாக்கதும்
தன்னிடத்தில் இருந்து சற்று நகர்ந்தாலே
கலையழகால் கண்ணிரண்டின் கருமையது
கணக்காக முத்தின் மேல் பகுதி சேர
அலை கடலின் செம்பவள இதழ்கள் தம்மின்
அச்சிவப்பு முத்தின் கீழ்ப் பகுதி சேர
நிலை குலைந்தான் குன்றி மணி என நினைந்து
நீள் விழியாள் இரு கரத்தால் உண்மை தேர்ந்தான்

அவிவேக சிந்தாமணி

கொல்லுலை வேற்கயற்கண் கொவ்வையங்கனி வாய்
மாதே
நல்லணி மெய்யில் பூண்டாய் நாசிகாபரண மீதில்
சொல்லதில் குன்றி தேடிச் சூடியதென் னோவென்றான்
மெல்லியல் கண்ணும் வாயும் புதைத்தனள் வெண்
முத்தென்றான்



கால் ஒன்று நொண்டி கண் ஒன்றோ இல்லை
காதுகளும் அறுபட்டுப் போக
வால் அதுவும் ஊரார் தனை வணங்கி நின்றும்
வடிவாக துண்டித்து விட்டார்
பால் பானை உடைந்து தலையோடு தொங்க
பார்க்கின்றார் அதைக் கண்டு சிரிக்க
ஏலாத போதும் பெண் நாயின் பின்னே
இரைத்தங்கு செல்கிறது ஆண் நாய்

ஊராரே இதனை உமக்கேன் தான் சொன்னார்
உள்ளதனை உள்ள படி சொல்வேன்
யாரான போதும் இதுதானாம் நிலைமை
எப்படியும் காமமது கொல்லும்
கூராக அதனை ஆண் நாயின் மூலம்
கூறி நின்றார் அக்காலப் புலவர்
யாராரோ இதனை வென்றதாய்ச் சொல்லல்
எப்படி என்றல் இதனுட் செய்தி



அவிவேக சிந்தாமணி

உணங்கி ஒரு கால் முடமாகி
உரு கண் இன்றிச் செவியிழந்து
வணங்கு நெடு வால் அறுப்புண்டு
அகல் வாயோடு கழுத்தேந்தி
சுணங்கன் முடுவல் பின் சென்றாள்
யாரைக் காமன் துயர் செய்யான்

கள்ளொன்று கள்ளை உண்டு களித்தது அதனால் அவளின்
கண்களில் கள்ளே வந்து களியாட்டம் போட்டதங்கு
வெள்ளமாம் கள்ளை நல்ல விளிம்பிலே ததும்பக் கொண்டாள்
வியப்புடன் காணுகின்றாள் வெண்ணிலா கள்ளுக்குள்ளே
துள்ளியே பெண்ணாள் நிலவைத் துயரத்தை விடுக என்றாள்
துரத்திடும் பாம்புக்கஞ்சி கள்ளுக்குள் வந்தாயோ நீ
வெள்ளையே நிலவே வேண்டாம் கவலைகள் அஞ்சேல் என்றாள்
கள்ளினால் விளையும் இந்தக் காட்சியைக் கம்பன் தந்தான்

கம்பன்

களித்த கண் மதர்ப்ப ஆங்கு ஓர் கனங்குழை
கள்ளின் உள்ளாள்
வெளிப்படுகின்ற காட்சி வெண்மதி நிழலை நோக்கி
அளித்தனன் அபயம் வானத்து அரவினை அஞ்சி வந்து
ஒளித்தனை அஞ்சல் என்று ஆங்கு இனியன
உணர்த்துகின்றாள்

நீராடுகின்றார் பெண்கள் நெருங்கி தம் அன்பரோடு
போராட்டம் அல்ல நல்ல பூவாட்டம் ஆட்டம் ஆட்டம்
சீரான இசையே பேச்சாய் சிறப்புற வழங்கும் பெண்ணாள்
சிவந்த நல் இதழோ பவளம் தாமரை சேர்ந்த ஒன்றாம்
கூரான வாளும் நல்ல குவளையும் சேர்ந்த கண்கள்
ஆருமே இல்லையென்னும் கரும்பெனும் இடையாம் அந்தச்
சீமாட்டி கேட்டாள் உள்ளம் சீராட்டும் காதலானை
நீராட்டுக்குள்ளே கம்பன் நீராட்டும் அழகுச் செய்தி

கயலெனக் கண்கள் கொண்டாள் கயல்களை நீரில் கண்டாள்
கண்களால் கொண்ட கொன்ற காதலன் தன்னைக் கேட்டாள்
புயலெனச் சொல்வீர் கண்ணைப் பூவென்றும் சொல்வீர் மீண்டும்
தயவில்லாக் கண்கள் என்றும் தாங்கியே நிற்பீர் இங்கோ
இயங்கிடும் குளத்தின் கண்கள் எப்போதும் ஓடி ஓடி
இளைப்பாறல் இன்றிச் சுற்றும் எழிலினைப் பாரும் என்றாள்
மயங்கிய பெண்ணாள் மீன்கள் குளங்களின் கண்கள் என்றாள்
மனம் போல ஓடும் கண்கள் என்றாங்கு மயங்கி நின்றாள்



கம்பன்

பண் உளர் பவளத் தொண்டை பங்கயம் பூத்தது அன்ன
வண்ண வாய் குவளை வாள் கண் மருங்கு இலாக்
கரும்பின் அன்னார்
உள் நிறை கயலை நோக்கி ஓடு நீர்த் தடங்கட்கெல்லாம்
கண் உள ஆம் கொல் என்று கணவரை வினவுவாரும்

சொற்களுக்குள் அடங்காதாம் காமம் என்னும்
சுவையதுவும் சொல்லகின்றான் கம்ப நாடன்
விற்பிடித்த இராமனவன் சென்றான் அங்கே
விழி கொண்ட பெண்ணொருத்தி கண்டு விட்டாள்
பொற் பதத்தாள் படுகின்ற துயரம் தன்னைப்
புகலுகின்றான் கம்பனவன் மெல்லக் கேட்பீர்
கற்பனையை விரிக்கின்றான் விரித்த போதும்
கனித்தமிழர் பண்பாடும் காத்து நின்றான்

எழுத்துக்குள் அடங்காத காமம் தன்னை
எடுத்தெழுதி வெற்றி கண்ட ஓவியம் போல்
துளிர்த்தங்கு நிற்கின்றாள் பெண்ணொருத்தி
துடிக்கின்றாள் ராமனையே கண்ட பின்னர்
கழுத்தோடு உறவு கொண்ட அணிகலன்கள்
கைளிலே அணிந்து நின்ற வளைக்குலங்கள்
பொருப்பாகும் மார்பகத்தின் அணிகலன்கள்
பொன் நகைகள் அத்தனையும் பறித் தெறிந்தாள்

நெருப்பாகி மேனியெல்லாம் தகி தகிக்க
நெஞ்சுக்குள் பெருந்தீயே கொதி கொதிக்க
சுருக்கான இடைக்குள்ளோ சூடு ஏற
சொருகுகின்ற விழிகளுக்குள் இராமன் ஆட
மிடுக்கான இராமன் அவன் தந்த நோயால்
மேனி படும் பாட்டில் அவள் ஆடினாலும்
பொறுப்பாக தன் உடலை மறைப்பதற்காய்
போட்டிருந்தாள் ஆடையொன்று மேனிமேலே

தன்னை இழந்தாள் என்றே ஓதுகின்றான்
　　தங்க நகை துறந்ததையும் ஓதுகின்றான்
மென்நகையை இழந்தாள் என்றோ துகின்றான்
　　மேனி தாங்க முடியாள் என்றோ துகின்றான்
அன்னவெல்லாம் ஓதியவன் ஓதுகின்றான்
　　அழகு மயில் தாங்கி நின்ற தொன்றே யென்று
மென்நகையாள் ஆடை மட்டும் தாங்கினாளாம்
　　மேன்மையுறு தமிழினம் தான் என்பதனால்

கன்னலெனும் தமிழ்க் கவிதைக் கம்பனவன்
　　காட்டி நின்ற இப்பெருமை உள்ளம் தன்னில்
மின்னலென வெட்டி நிற்கும் மெய் சிலிர்க்கும்
　　மேன்மை கொண்ட தமிழினத்தைப் போற்றி நிற்கும்
அன்னவனின் கவிதையினைக் கற்கக்கற்க
　　ஆடி நிற்கும் பாடி நிற்கும் நம் மனது
சொல் நலம் கடந்ததென்ற அந்தப் பாடல்
　　சொல்லுகின்றேன் இதன் பின்னர் அதனைப் பாரும்

கம்பன்

சொல்நலம் கடந்த காமச்சுவையை ஓர் உருவம் ஆக்கி
இன்நலம் தெரிய வல்லார் எழுதியது என்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீரால் புனைந்தன எல்லாம் போக
தன்னையும் தாங்கலாதாள் துகில் ஒன்று தாங்கி நின்றாள்

கம்பனெனும் மாக்கவிஞன் காட்டுகின்ற காதலினை
அம்புவியின் தமிழன்பர் அனைவருக்கும் தர விழைந்தேன்
கொம்பு முலைக் கூட்டத்துக் கோலவிழிப் பெண்ணொருத்தி
வெம்புகின்ற தன்னுடலின் வெப்பமது தாங்காமல்
நம்பி நின்ற நாயகனை நாட் பலவாய்க் காணாமல்
வம்பு செய்யும் தன் உடலின் வாட்டமது தாங்காமல்
தெம்பு தர வருவானோ தீண்டி வெப்பம் தீர்ப்பானோ
தெங்கிள நீர் மார்பகத்தைச் சேர்ந்திடவே மாட்டானோ

நொந்து நின்றாள் பெண்ணவளும் நோவதனைத் தீர்ப்பதற்கு
வந்து விட்டான் நாயகனும் வரவேற்றாள் தாழிட்டாள்
செந்தமிழின் சிவப்புதட்டால் சேர்த்தே இறுக்குகின்றாள்
வந்தவனோ மனமகிழ்ந்தான் வரவிலுள்ள தாமதத்தால்
நொந்தவளும் தன்னை நோகடிப்பாள் என நினைந்தால்
அந்தி மழைக் காலத்து அரவணைப்பால் நெருக்குகின்றாள்
தந்து விட்டாள் தன்னை தாமதத்தால் ஏக்கத்தால்
என்றே கருதி நின்றான் இடையூறு வந்ததங்கு

பல காலம் காத்திருந்த ஏக்கம் தன்னில்
பனி மொழியாள் தழுவி விட்டாள் தெளிந்த பின்னர்
சில பலவாம் கேள்விகளால் என்னைன அவள்
சிக்கலுக்கு ஆளாக்கக் கூடும் என்றே

வெல வெலத்து நிற்கின்றான் அவளோ மெல்ல
விலகுகின்றாள் அவன் முதுகைத் திருப்பிப் பார்த்தாள்
பலப்பலவாய் எண்ணங்கள் படையெடுக்க
பாவி மகன் துடிக்கின்றான் அவளைப் பார்த்தான்

கல கலவென்றே சிரித்தாள் கண்ணசைத்தாள்
கலங்கியவன் புரியாமல் சிரித்து வைத்தான்
வல இடமாய் அவன் தன்னை ஆட்டி ஆட்டி தன்
வடிவழகால் கொல்லுகின்றாள் சொல்லுகின்றாள்
முலை இரண்டும் உந்தன் திரு மார்பை குத்தி
முதுகுக்கு வந்திருக்கும் என நினைத்தேன்
சிலை மார்பே உன் மார்பு என்றுணர்ந்தேன்
சிரிப்பென்ன வா என்றே தழுவிக் கொண்டாள்



கம்பன்

கொலை உரு அமைந்தெனக் கொடிய தோற்றத்தாள்
கலை உரு அல்குலாள் கணவர்ப் புல்குவாள்
நிலை உரு வழி தரச் செறிந்த மார்பிற் தன்
முலை உருவின் என முதுகை நோக்கினாள்

யாழுக்கும் குழலுக்கும் இனிமை ஈந்த
இடையென்ற ஒன்று இல்லா எழிலாம் பெண்ணாள்
பேழையெனும் வாய் திறந்தால் மழலை அதும்
பேச்சல்ல இசையாக வழங்கும் மின்னாள்
வாள் போன்ற கருங்குவளைக் கண்கள் தம்மை
வாயருகே கொண்டு போன மதுவிற்குள்ளே
தான் கண்டு வண்டு எனத் துரத்தினாளாம்
தருகின்றான் கம்ப நாடன் தருவித்தேன் நான்



கம்பன்

யாழ்க்கும், இன்குழற்கும், இன்பம் அளித்தன் இவை
ஆம் என்ன
கேட்கும் மென் மழலைச் சொல் ஓர் கிஞ்சுகம்
கிடந்த வாயாள்
தாள் தரும் குவளை தோய்ந்த தண் நிறைச்
சாடியுள் தன்
வான்-கணின் நிழலைக் கண்டாள் வண்டு என
ஓச்சுகின்றாள்

பறவைகளால் நிறைந்திருக்கும் அழகு ஏரி
படபடக்கும் கண்ணழகுப் பெண்ணாள் கண்டு
உறைவிடத்திற்குள்ளேயே மீன்களெல்லாம்
ஒளிந்துகொள்ள முயல்கிறதாம் நாணம் கொண்டு
உறையை விட்டு வெளியில் வந்த வாளைப் போலே
உயிர் பறிக்கும் வேலை செய்யும் அந்தக் கண்கள்
செறி அழகுக் கூந்தலிலே சேர்வதற்காய்
செய்தவத்தின் தேன் மலர்கள் கூட்டம் அங்கு

மது அருந்தி நிற்கின்றார் கூட்டத்திற்குள்
மங்கையுமே நிற்கின்றாள் என்ற போதும்
மது அருந்தவில்லையவள் ஆமாம் ஆமாம்
மனதிற்குள் இருக்கின்ற காதலனோ
மது அருந்தும் பழக்கமது இல்லான் என்று
மங்கை நன்கு உணர்ந்ததனால் அருந்தவில்லை
அது அவனுக்கு ஒவ்வாதென்றறிந்ததனால்
அருந்தவில்லை என்கின்றாள் கம்பநாட்டான்



கம்பன்

புள் உறை மகல வாவிப் பொரு கயல் வெருவி ஓட
வள் ஒறை கழிந்த வாள் போல் வசி உற
வயங்கு கண்ணாள்
கள் உறை மலர் மென்கூந்தல் கனி இள
மஞ்ஞை அன்னாள்
உள் உறை அன்பன் உண்ணான் என உன்னி நறவை
உண்ணாள்

நீர் நிறைந்த ஏரியிலே பெண்களெல்லாம்
நீண்ட நேரம் ஆடி நின்ற ஆட்டமதில்
சீர் நிறைந்த கண்களெல்லாம் சிவப்புறவே
சிவந்தவாய் நிறம் மறைந்து வெளுப்புறவே
வார் கொண்ட மார்பு கொண்ட சந்தனத்தை
வளர் அழகு மார்பில்கொண்ட குங்குமத்தை
நீர் கலைத்து நின்றதவர் காதலர் போல்
நிலை குலைய வைத்ததவர் சீலையினை

காதலர்கள் சேரும் நல்ல கலவியிலே
கலைவதெல்லாம் கலைந்ததந்த நீர் நிலையில்
போதமதை இழந்து அங்கே மங்கை நல்லார்
புகுந்து புகுந்து ஆடியதை கம்பன் இங்கு
ஆர்வமுடன் சொல்லுகின்றான் நீர் நிலையும்
ஆடவர் தம் தொழிலையெல்லாம் செய்ததாக
பாடலிதைத் தருகின்றேன் படித்துப் பாரும்
பாவி மகன் கம்பனையே புரிந்து கொள்ளும்

கம்பன்

செய்ய வாய் வெளுப்ப கண் சிவப்புற
மெய் அராகம் அழிய, துகில் நெக
தொய்யில் மா முலை மங்கையர் தோய்தலால்
பொய்கை, காதல் கொழுநரும் போன்றதே

ஆடைக்குள் அடங்காத அகன்ற அல்குல்
அய்யய்யோ மார்பகங்கள் ஐயோ ஐயோ
ஜாடைக்கு மலைகள் என்று சொன்னால் கூட
சரியாமோ தவறாமோ சொல்லி வைப்போம்
கூட நிற்கும் ஆடவரின் தோள் மலை போல்
கூடுதற்காய் நீர் நிலைக்குள் நெருங்குகின்றார்
பாடு படும் நீர் நிலையின் பாடதனைப்
பாடுகின்றான் கம்பனெனும் பாவி மகன்

எல்லாமே பெரிதாக இருப்பதெல்லாம்
இறங்கி அந்த நீர் நிலையை நெருக்கும் நேரம்
அல்லாடிப் போகிறதாம் நீர் நிலையும்
ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தை அன்றே கம்பன்
வல்லானாய்ச் சொல்லுகின்றான் வியந்து நின்றேன்
வடிந்திடுமாம் அவர் எடையின் நீர் வெளியே
சொல்லுக்குச் சொல்லடுக்கித் தமிழாம் தாயைச்
சொக்க வைக்கும் கம்பனது பாட்டைப் பார்ப்போம்

கம்பன்

மலை கடந்த புயங்கள் மடந்தைமார்
கலை கடந்து அகல் அல்குல் கடம் படு
முலைகள் தம்தமின் முந்தி நெருங்க லால்
நிலை கடந்து பரந்தது நீத்தமே



நீராடுகின்றார் பெண்கள் நெருங்கி தம் அன்பரோடு
போராட்டம் அல்ல நல்ல பூவாட்டம் ஆட்டம் ஆட்டம்
சீரான இசையே பேச்சாய் சிறப்புற வழங்கும் பெண்ணாள்
சிவந்த நல் இதழோ பவளம் தாமரைசேர்ந்த ஒன்றாம்
கூரான வாளும் நல்ல குவளையும் சேர்ந்த கண்கள்
ஆருமே இல்லையென்னும் கரும்பெனும் இடையாம் அந்தச்
சீமாட்டி கேட்டாள் உள்ளம் சீராட்டும் காதலானை
நீராட்டுக்குள்ளே கம்பன் நீராட்டும் அழகுச் செய்தி

கயலெனக் கண்கள் கொண்டாள் கயல்களை நீரில் கண்டாள்
கண்களால் கொண்ட கொன்ற காதலன் தன்னைக் கேட்டாள்
புயலெனச் சொல்வீர் கண்ணைப் பூவென்றும் சொல்வீர் மீண்டும்
தயவில்லாக் கண்கள் என்றும் தாங்கியே நிற்பீர் இங்கோ
இயங்கிடும் குளத்தின் கண்கள் எப்போதும் ஓடி ஓடி
இளைப்பாறல் இன்றிச் சுற்றும் எழிலினைப் பாரும் என்றாள்
மயங்கிய பெண்ணாள் மீன்கள் குளங்களின் கண்கள் என்றாள்
மனம் போல ஓடும் கண்கள் என்றாங்கு மயங்கி நின்றாள்

கம்பன்

பண் உளர் பவளத் தொண்டை பங்கயம் பூத்தது அன்ன
வண்ண வாய், குவளை வாள் கண் மருங்கு இலாக்
கரும்பின் அன்னார்
உள் நிறை கயலை நோக்கி ஓடு நீர்த் தடங்கட்கெல்லாம்
கண் உள ஆம் கொல் என்று கணவரை வினவுவாரும்

நீண்ட அப்பார்வை நஞ்சே நெருங்கிட முடியார்க்கெல்லாம்

நிலைத்திடும் அமுதம் அந்த நீள்விழிப் பெண்ணாள் சொல்லே

காண்தகு அழகுப் பெண்ணாள் கைகளில் மதுவை ஏந்திக்

களித்திட்டாள் கோப்பைக்குள்ளே தன்னையே கண்டாள் அங்கே

வாள் நுதல்ப் பெண்ணாள் அந்த வடிவத்தை வேறோர் பெண்ணாய்

வகை செய்து அவளையும் வா மது உண்போம் என்கிறாளாம்

ஆள் தூக்கும் மதுவால் வந்த அறியாமை இதனைப் போல

அறியாமை வேறு இங்கு யாரிடம் உண்டு சொல்வீர்



கம்பன்

விடன் ஒக்கும் நெடிய நோக்கின்
அமிழ்து ஒக்கும் இன்சொலார்தம்
மடன் ஒக்கும் மடனும் உண்டோ
வாள் நுதல் ஒருத்தி காணா
தடன் ஒக்கும் நிழலைப் பொன் செய்
தண் நறுந்தேறல் வள்ளத்து
உடன் ஒக்க உவந்து நீயே
உண்ணுதி தோழி என்றாள்

மதுவினால் மயக்கம் கொண்டாள்
மன்மதன் அம்பும் கொண்டாள்
இது விளை காலம் தன்னில்
இல்லையே கணவன் என்று
துகில் இடை மேலே நல்ல
தூமணி மேகலையை
அணிந்துள்ளாள் தோழி தன்னை
அனுப்புவாள் தூது சொல்ல

உடன் அவன் இங்கே வேண்டும்
உண்மையை உணர்த்து நீயும்
திடமாகச் சென்று சொல்லி
திரும்ப நீ வருதல் வேண்டும்
மடந்தையே நீயும் எந்தன்
மனம் போல அங்கேயே போய்
இருந்திட வேண்டாம் என்றே
இயம்பியே நின்றாள் நங்கை

கம்பன்

கனை கழல் காமனால் கலக்கம் உற்றதை
அனகனுக்கு அறிவி என்று அறியப் போக்கும் ஓர்
இனமணிக் கலையினாள் தோழி நீயும் என்
மனம் எனத் தாழ்தியோ? வருதியோ என்றாள்

மதுவினால் மயங்குவார்கள் மயங்கிய கூட்டத்துள்ளே

மயங்கினாள் மங்கை நல்லாள் மதுவினை அருந்தும் முன்னே

இதம் தரும் கண்கள் ரெண்டும் கொலை செயும் வேலைப் போன்றாள்

இடையதன் பெருமை சொல்லும் இனிய நல் மார்பைக் கொண்டாள்

பதம்நிறை நிலவின் ஒளியைப் பளிங்கினுள் மதுவென்றேந்தி

இதழதில் சேர்க்கப் போனாள் எல்லோரும் நகைத்து நிற்க

மதுவுள்ளே போகு முன்பே நாணத்தை உட் கொண்டாளாம்

மது உள்ளே போனால் நாணம் மறைந்திடும் கம்பன் சொன்னான்



கம்பன்

முறம் எலாம் நகை செய்து ஏசப் பொரு அரு மேனி
வேறு ஓர் மறம் உலாம் கொலை வேற் கண்ணாள்
மணியின் வள்ளத்துவெள்ளை நிற நிலாக்
கற்றை பாய நிறைத்தது போன்று தோன்ற

ஆடினார் நீரில் அவர் ஆடிய ஆட்டம் தன்னால்

மூடிய மார்பை விட்டு சந்தனம் கரைந்து போக

கூடிய நேரம் அந்தக் குவி முலைக் கூட்டம் தன்னில்

கொண்டவர் வைத்து நின்ற நகக் குறி வெளியில் தோன்ற

வேள்வியின் பொன்னாலான கலசங்கள் நூல் கொண்டாற் போல்

வெறி நகக் குறிகள் தோன்ற காதலர் எரிகின்றாராம்

வேள்வியாய்க் காமம் தானும் விளைவதே நன்று என்று

ஆழ் மன எண்ணம் தன்னை அழகுறக் கம்பன் தந்தான்



கம்பன்

எரிந்த சிந்தையர் எத்தனை என்கெனோ
அரிந்த கூர் உகிரால் அழி சாந்து போய்
தெரிந்த கொங்கைகள், செவ்விய நூல் புடை
வரிந்த பொற் கலசங்களை மானவே

மது உண்ண நிறைந்து நிற்கும் மங்கையர் கூந்தல் தோறும்
மலர்களில் மொய்க்கும் வண்டின் மாபெரும் கூட்டம் அங்கே
தருவதில் விருப்பம் இல்லார் தனைச் சூழும் இரப்பார் போல
விறு விறு என்று சுற்றி விண் வரை நிறைந்து நிற்க
மது உண்ண தாமரைச் செவ்வாயினைத் திறந்தால் வண்டு
அது உள்ளே நுழையும் என்று அஞ்சிய பெண்ணாள் வாயில்
கழுநீர்ப் பூத்தண்டைக் கொண்டு மதுவினை உறிஞ்சினாளாம்
கனித் தமிழ் நாடு கண்ட இயற்கையின் குழலைக் கண்டோம்

கம்பன்

வான் தனைப் பிரிதல் ஆற்றா
வண்டு இனம் வச்சை மாக்கள்
என்ற மாநிதியம் வேட்ட
இரவலர் என்ன ஆர்ப்ப
தேன் தரு கமலச்செவ்வாய்
திறந்தனள் நுகர நாணி
ஊன்றிய கழுநீர் நாளத்
தாளினால் ஒருத்தி உண்டாள்

லஞ்சமோ அன்பளிப்போ நமக்கது புரியவில்லை
கொஞ்சிடும் பெண்ணொருத்தி கொடுத்திட முனைந்தாள் என்று
வஞ்சமே இல்லாக் கம்பன் வாய் மொழிப் பாடல் ஒன்று
அஞ்சுக மொழியாள் கோப்பை மதுவினை ஏந்தி நின்றாள்
மஞ்சுலாஅம் நிலவை அந்த மதுவுள்ளே பார்த்து விட்டாள்
கொஞ்சியே நிலவிற்கொன்றை கூறினாள் ஆகா ஆகா
கொஞ்சம் நீ ஊடல் நேரம் கொன்றிடும் வெம்மை விட்டு
குளிர் நிலவாகி நின்றால் கொடுப்பேன் இம்மதுவை என்றாள்

தன் முகம் மதுவுக்குள்ளே தளிர் நிலவாகத் தோன்ற
தனக்குள்ளே மதுவைக் கொண்ட தளிர்க் கொடி போதை ஏற
என்னவன் தானும் நானும் இடையினில் ஊடல் கொண்டால்
தண் நிலா வெப்பம் கொண்டு தாக்குமாம் தன்னைக் கொல்ல
அந்நிலா என்று எண்ணி அவள் முகம் தன்னிடத்தே
வெண்ணிலா உனக்குத் தருவேன் மதுவினை வேண்டு மட்டும்
கண்மணி ஊடல் நேரம் கனிவுடன் நீ நடந்தால்
பெண்மணி பேரம் லஞ்சப் பேயதன் தொடக்கமன்றோ

கம்பன்

கண்மணி வள்ளத்துள்ளே களிக்கும் தன் முகத்தை நோக்கி
விண் மதி மதுவின் ஆசை வீழ்ந்தது என்று ஒருத்தி உன்னி
உள் மகிழ்த் துணைவனோடும் ஊடு நாள் வெம்மை நீங்கி
தண் மதி ஆகின் நானும் தருவென் இந்நறவை என்றாள்

இடையது முறியும் என்றே இருக்கின்றார் எல்லாம் காண
இதழதன் சிவப்பில் ஊரார் இரத்தத்தின் துடிப்பு ஏற
படையெனும் மார்பும் நஞ்சின் வேலைப் போல் கண்கள் ரெண்டும்
தடையின்றி வளர்ந்த கூந்தல் தரையினைத் தழுவி நிற்க
குடிக்கின்றாள் பெண்ணாள் மதுக் கோப்பையைக் கையில் ஏந்தி
கோப்பைக்குள் தன்னைக் கண்டாள் கோபத்தின் உச்சி கண்டாள்
அடிப் போடி எச்சில் உண்ணும் பைத்தியம் அங்கே போய் நீ
அளவின்றிக் குடிக்கலாம் என்றவளையே விரட்டுகின்றாள்

கம்பன்

அச்ச நுண் மருங்குலாள் ஓர்
அணங்கு அனாள் அளக பந்தி
நச்சு வேல் கருங்கண் செவ்வாய்
நளிர் முகம் மதுவுள் தோன்ற
பிச்சி நீ என் செய்தாய் இப்
பெரு நறவு இருக்க, வாளா
எச்சிலை நுகர்தியோ என்று
எயிற்று அரும்பு இலங்க நக்காள்

கண்ணனை எண்ணி எண்ணிக் களித்தலுக காளேயாகி
எண்ணிய எண்ணம் தன்னால் இளைத்தங்கு மயக்கமாகி
புண்ணியம் செய்த ஆண்டாள் பூவுடல் தளர்தல் கண்டு
கன்னியர் எல்லாம் கூடிக் களி மயில்த் தோகை கொண்டு
பொன்னுடல் துன்பம் தீரப் பூப்போல வீசி நின்றார்
என்ன நீர் செய்தீர் அய்யோ இதனாலா மயக்கம் தீரும்
மன்னவன் இடுப்பின் பட்டில் மாலவன் வாடை உண்டு
அன்னவன் இடுப்பின் பட்டை அவிழ்த்திங்கு வீசுவீரே

பெண்ணாளின் உள்ளம் காணாப் பெருந்தகையாளன் தன்னால்
கண்ணாளா என்றழைத்தும் காணாமல் மயக்கமானேன்
நன்னாரி வேரைக் கொண்டு நல்லதோர் விசிறி செய்து
என்னதான் வீசினாலும் எப்படி மயக்கம் தீரும்
பெண்ணாரே அவன் இடுப்பில் பேணலால் சேர்ந்த பட்டு
தன்னாலே வீசினால்தான் தளிர்க் கொடி நானும் வாழ்வேன்
என்றாளே ஆண்டாள் அந்த ஏக்கத்தைப் பாட்டும் ஆக்கித்
தந்தாளே கண்ணனைத் தன் தளிர்க் கையால்
சேர்த்துக் கொண்டாள்

ஆண்டாள்

கண்ணன் என்னும் பெருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனை
பண்ணிற பணிப் பெயதாற் போல புறம் நுன்றழகு பேசாமே
பெண்ணின் வருத்தம் அறியாத பெம்மான அரையின் பிதக
வண்ண ஆடை பொண்டென்னை வாடம் தணிய விசிரே

தழுவாத மார்பிரண்டு எனக்கே இங்கு
தந்ததிலே நியாயம் என்ன சொல்லு கண்ணா
களவாடிச் செல்லுதற்கு மனத்தை மட்டும்
கணக்கிட்டுக் கொண்டு சென்றாய் நீதியா சொல்
அளவில்லாத் துன்பமது இந்த மார்பால்
அடைகின்றேன் தாங்கவில்லை என்ன செய்ய
பளுவாகித் துடிக்கின்ற இந்த மார்பைப்
பறித்தெறிவேன் உன் மார்பில் வா வா நீயும்

ஆண்டாள்

உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாதக்
கொள்ளைக் கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக்
கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாக் கொங்கை தன்னைக்
கிழங்கோடு
அள்ளிப் பறித்திட் டவன் மார்பில் எறிந்தேன் அழலைத்
தீர்வேனே

இல்லாதார் பிச்சையெடுத்தேங்கி ஏங்கி
எவ்விடத்தும் அலைகின்றார் அய்யோ பாவம்
பொல்லாதார் இங்கொருவர் பிச்சையேற்று
புவனமெலாம் அலைவதிலே நீதியுண்டோ
நல்லாரே கேட்டிடுவீர் உம்மோடன்றி
நான் இதனை யாரிடத்தில் சொல்ல ஏலும்
வல்லார்கள் பிச்சையென்று வந்து விட்டால்
வரை முறைகள் இல்லாமல் பிடுங்குகின்றார்

கொடுக்கின்ற வாழ்வளித்தான் இறைவன் என்று
கொள்ளாமல் தான் என்ற உணர்வு ஓங்க
மிடுக்காகத் தான் அலைந்தான் மாவலியும்
மீட்டவனுக்காய் அங்கு அருளே செய்ய
தடுத்தவனை ஆட்கொள்ள மிகச் சிறிய
தனி வடிவம் கொண்டு வந்து பிச்சையேற்றான்
எடுத்த பிச்சை மூன்றுலகும் கொண்ட பிச்சை
இருந்தும் எந்தன் வளையலையும் பிச்சை கொண்டான்

கொடுப்பவரைத் தேடி அன்றோ பிச்சை தன்னைக்
கொள்பவர்கள் வரவேண்டும் அதனை விட்டு
இருக்கின்ற இடத்திருந்து பிச்சை தன்னை
எடுப்பதிலே நியாயம் உண்டோ சொல்வீர் அய்யா



பொறுக்காத காதலினால் மெலிந்தழிந்து
போனதனால் கை வளைகள் கழன்று போக
எடுத்தவனே கண்ணனென்றும் பிச்சை தன்னை
ஏற்பதற்கு எனைத் தேடி வருதல் தானே

பொருத்தம் அதை விட்டு எங்கோ இருந்து கொண்டு
போடு பிச்சை என்றவனே எடுத்துக் கொள்ளல்
வருத்தம் தரும் என்னைப் போல அவனுக்கென்றே
வழங்குவதற்கு பிறந்தார்க்கு யார்தான் சொல்ல
கருத்த மேனிப் பேரழகன் கண்ணன் என்னும்
கனி வாயன் குழல்க் கையன் தன்னை இங்கு
திருத்தமாகத் தமிழ்க் கவியில் பாடுகின்றாள்
திருவில்லிப் புத்தூரில் பிறந்த ஆண்டாள்

ஆண்டாள்

மச்சணி மாட மதில் அரங்கர் வாமனனார்
பச்சைப் பசுந் தேவர் தாம் பண்டு நீரேற்ற
பிச்சை குறையாகி என்னுடைய பெய்வளை மேல்
இச்சை யுடையரேல் இத்தெருவில் போதாரே

தாமதமாய் வந்து விட்ட காளை கண்டான்
        தளிர்க் கொடியாள் உறக்கமதைத் தழுவியதை
பூமணத்து மேனியினைத் தான் தழுவி
        புதுக் கதைகள் பல படித்து மேனியெங்கும்
நாமணக்க முத்தமிட்டு மேலும் மேலும்
        நல்கு என அவள் வேண்ட மீண்டும் மீண்டும்
ஆவணமாய் அழகு மயில் உடலம் கொண்டு
        அனைத்தையுமே பத்திரமாய் எழுதிப் பின்னர்

கோமகளும் உறங்குவதே வழக்கம் என்ன
        கோபத்தில் துயில் கொண்டாள் என நினைந்தான்
சாமமிது இவ்வுறக்கம் இதனை நாமும்
        சரியாகப் பயன்படுத்தல் வேண்டும் என்றே
ஆவலினை நெஞ்சினிலே கொண்டான் அந்த
        அழகு மயில் அருகினிலே சென்றான் நின்றான்
தாவி அவள் இடையினுக்கு இடையே தன்னின்
        தடக்கையைக் கொண்டு வைத்தான் விழித்தாளில்லை

ஆவலதில் மார்பிரண்டும் விம்மியோங்க
        அழகு மயில் நடிக்கின்றாள் துயில்வாள் போல
காவலனோ வைத்த கையை எடுக்கவில்லை
        கண்மணியோ நடிக்கின்றாள் விழிக்கவில்லை
பாவலனாம் ஜெயங்கொண்டப் பாவி மன்னன்
        பாப்புனைந்து தந்துள்ளான் பரணி தன்னில்
தாவி வரும் செய்யுளதைப் பின்னால் தந்தோம்
        தமிழினத்தார் இப் பெருமை நமக்கே சொந்தம்

செய்யுள்

இத்துயில் மெய்த்துயில் என்று குறித்து
இளையோர் அடியிற் கைத்தலம் வைத்தலும்
பொய்த்துயில் கூர் நயனக் கடை திறவா
மடவீர் கடை திறமின் திறமின்

வருகின்றார் நம்மையே தழுவுகின்றார்
வாயாரப் புகழுகின்றார் கொஞ்சுகின்றார்
தருகின்றார் செல்வமதை அள்ளி அள்ளி
தட முலை மேல் உறங்குகின்றார் தனை மறந்து
அருகாமல் தள்ளி நின்றால் காலில் கூட
அப்படியே விழுகின்றார் புரியவில்லை
செரு காமம் தீர்க்கின்றார் இன்பம் தந்து
சிந்தனைக்கு எட்டவில்லை காரணமும்

அரிதான தொழில் இதிலே மூத்திருக்கும்
அன்னைக்கு இணையான பெண்ணிடத்தில்
விரி காமச் சோலையெனப் பூத்திருக்கும்
விழியழகி கேட்கின்றாள் மூத்தவளோ
சிரிப்போடு பதிலதனைச் சொல்லுகின்றாள்
செம்மை மிக்க அறஞ் செய்யார் செல்வம் தன்னை
பிரித்தெங்கும் சிதறடிக்க கள்ளைச் சூதைப்
பெண் நமையும்படைத்தானே பிரம்மன் தானே

செய்யுள்

அன்னையே அனைய தோழி அறந்தனை வளர்க்கும் மாதே
உன்னையோர் உண்மை கேட்பேன் உரை
தெரிந்துரைத்தல் வேண்டும்
என்னையே புணருவோர்கள் எனக்குமோர் இன்பம் நல்கி
பொன்னையும் கொடுத்து பாதப் போதினில் வீழ்வதேனோ

காதல் வசப் பட்டாலே பேசுதலில்
கணக்கில்லை வழக்கில்லை நேரமில்லை
பாதகமேயில் லாமல் யாரிடத்தும்
பகன்றிடுவார் தம் உள்ளத் தெண்ணமெல்லாம்
ஆதரவு தேடுகின்றாள் ஆசைப் பெண்ணாள்
யாரிடத்து என்பதிலே தான் புலவர் நின்றார்
மாதவந்தான் பாண்டியனின் குதிரையோடு
மங்கை நல்லாள் பேசுகின்றாள் வேண்டுதல்தான்

புகழ்ந்து பின்னர் வேண்டினால் தான் நலம் விளையும்
புரிந்தவளாய்ப் பேசுகின்றாள் மங்கை நல்லாள்
அகம் நிறைந்த முகம் காட்டிப் பேசுகின்றாள்
அறிவாகத் தெளிவாக ஆர்வமாகப்
புகழ் உன்னால் பாண்டியர்க்கு போர்க் களத்தில்
புலவரெல்லாம் உனைத்தானே பாடுகின்றார்
தகும் அங்கு காட்டுகின்ற வேகமெல்லாம்
தரணி வெல்லப் போர்க்களத்தில் - ஊருக்குள்ளே

கதவிற்குப் பின்னாலே நின்றவனைக்
கண்டு வாழக் காத்திருக்கும் எனக்கு எல்லாம்
இதம் செய்ய வேண்டாமா கொஞ்சம் எண்ணு
எல்லாமே போர்க் களமா மெல்லச் செல்லு
வதம் செய்ய நாங்கள் என்ன எதிரிகளா
வடிவழகே மெதுவாய் நீ நடத்தல் ஒன்றே
பதம் செய்யும் எங்களையே பாண்டியனைப்
பார்த்திடுவோம் உயிர் வாழ்வோம் நன்மை செய்க

முத்தொள்ளாயிரம்

போரகத்துப் பாயு மா பாயாது ஒரு படியா
ஊரகத்து மெல்ல நடவாயோ - பார
மத வெங் களியானை மாறன் தன் மார்பம்
கதவங் கொண்டு யாமும் தொழ

கிளி வளர்த்தாள் ஒரு கிள்ளை சொன்னதெல்லாம்
கிண்ணாரம் கொட்டி உடன் மீண்டும் சொல்லும்
பழி வளர்க்கும் அது என்று தெரியாளாகி
படுக்கையறைக்குள்ளேயே வைத்துக் காத்தாள்
களி நடக்கும் வழி நடக்கும் காதல் கொள்ளை
கட்டிலிலே நடக்கின்ற நேரமெல்லாம்
கிளி இருக்கும் உள் அதனை மறந்தாளாகி
கிறுக்கு மொழி பல உளறி வளர்த்தாள் காதல்

அடுத்து பகல் விடிந்தங்கே தோழி மார்கள்
ஆற்றுக்கு நீராட அழைக்க வந்தார்
கெடுத்ததங்கு கிளி அவளின் மானம் தன்னை
கெக்கலித்துச் சிரித்து நின்றார் தோழிமார்கள்
படுக்கையறைச் செய்திகளை அடுக்கடுக்காய்
பச்சையாகப் பச்சைக்கிளி தொகுத்துரைக்க
துடித்து நின்றாள் செல்லமகள் வாயைப் பொத்தி
துடியிடை யோடுலை கின்றாள் அந்தோ அந்தோ

முத்தொள்ளாயிரம்

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப
வாயைப் புதைக்கும் மட நல்லீர்
மணிப் பொற் கபாடம் திறமினொ

ஒரு உணர்வே இரு புலவர் உள்ளம் தன்னில்
உருவாகும் என்பதற்கு உவமையாக
தருகின்றேன் இரு செய்யுள் உங்களுக்கு
தமிழன்னை கொடைகளினால் உளம் மகிழ்வீர்

இல்லாத இடை கொண்ட பெண்ணொருத்தி
இரு மார்பைத் தாங்கி மெல்ல நடக்கின்றாளாம்
பொல்லாத மார்பதனின் சுமைகள் தன்னால்
பொறுக்காமல் இடையதுவும் ஒடியும் என்றே

நில்லாமல் ஒலி எழுப்ப என்றே அந்த
நெடுங் கண்ணாள் சிலம்பிரண்டும் சத்தமிட்டு
எல்லோரும் வாருங்கள் இனிய பெண்ணின்
இடை முறியும் முன்னாலே காக்க என்று

நளவெண்பா

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டாது இடையென்று வாய் விட்டு - நாள்த் தேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு

குய்யோ முறையோ என்று கூச்சலிட்டுக்

கூப்பிடுமாம் ஊரையெல்லாம் உறவையெல்லாம்

அய்யோ இதைப் போன்றே அழகுச் செய்தி

அளிப்பதுவோ இரு புலவர் நமக்கு அய்யா

மெய்யாக வெண்பாவிற் கொருவரென்று

மேன்மை கொண்ட புகழேந்திப் புலவரோடு

பொய்யாத செயங்கொண்டான் பரணியிலே

புகலுகின்றான் இச்செய்தி காண்போம் வாரீர்

பரணி

உபய தனமிசையில் ஒடியும் இடை நடையை
ஒழியு ஒழியும் என ஒண்சிலம்பு
அபயம் அபயம் என அலற நடை பயிலும்
அரிவை மீர் கடைகள் திறமினோ

பழம்பாடல் புதுக் கவிதை என்ற உத்தி
பா நலத்துக் கண்ணதாசன் கண்ட ஒன்று
உளம் கொண்டேன் அவ்வழியைக் கொண்டதனால்
ஒரு நூலை உங்கள் முன் தருகின்றேன் நான்
வளம் கொண்டே வாழுகின்ற தமிழாம் அன்னை
வாழ வைத்தாள் அவள் அடிகள் பணிகின்றேன் நான்
தினம் என்னைக் காதலிக்கும் தமிழர் தம்மின்
தெம்பதனால் உயிர் வாழ்ந்தேன் காக்க வேண்டும்

அன்புடன்
நெல்லைக் கண்ணன்